உ
சிவமயம்

விசேஷ
விளம்பரத்திற்கு!

இந்துசாதனம்

விசேஷ
விளம்பரத்திற்கு!

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

Registered as a Newspaper in Ceylon
P. M. G. No. H. A. 59/300 of 1939.

மாசில்வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே, ஈச னெந்தை யிணையடி நீழலே.

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம்
28ஆ திகதி ஆரம்பமானது.

[புத்தகம்—௫௨] யாழ்ப்பாணம்:— விக்கிரம ௵ ஐப்பசி௴ ௨௯ (1940 நவம்பர் 14 வியாழக்கிழமை) [இலக்கம்—௯0]

வல்வில் ஓரி

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்

பண்டைக் காலத்தில் தமிழ் நாட்டில் கடை யெழு வள்ளல்கள் என்று சிறப்பிக்கப்பெற்ற ஏழு பேர்களில் வல்வில் ஓரி யென்பவன் ஒருவன். அவன் கொல்லி மலைக்கும் அதனைச்சார்ந்த நாட்டிற்கும் தலைவனாகிய ஒரு சிற்றரசன்; வீரத்திலும் கொடையிலும் சிறந்தவன்; ஒரு முறை வில்லை வளைத்து அம்பை எய்தால் அந்த அம்பு பல பொருள்களை ஒருங்கே துளைத்துச் செல்லும்படி செலுத்தும் வன்மையை அவ்வீரன் பெற்றிருந்தான். அவ்வாறு எய்யும் வில்லுக்கு 'வல்வில்' என்ற பெயர் வழங்கும். ஓரி யென்னும் இயற்பெயரை யுடைய அவன் அத்தகைய வன்மையை உடையவனாக இருந்ததனால் 'வல்வில் ஓரி' என வழங்கப் பெறுகிறான். இராமபிரானுக்கும் அத்தகைய வன்மை இருந்தமையின் அவரை 'வல்வில்ராமன்' என்று பெரியோர் வழங்குவர்.

வல்வில் ஓரியின் வில் வன்மையையும் ஈகைச் சிறப்பையும் ஒருங்கே புகழ்ந்து வன்பரணர் என்னும் புலவர் பெருமான் ஒருவர் ஒரு செய்யுள் இயற்றியிருக்கிறார். அது புறநானூற்றில் 152ஆம் செய்யுளாக அமைந்திருக்கின்றது. இசையில் வல்ல பாணன் ஒருவன் தன் சுற்றத்தாரோடு ஒரு மலைச்சாரலில் கண்ட காட்சியையும் பெற்ற பேற்றையும் வருணிப்பதாக அப்பாட்டு உள்ளது. அதிற் கண்ட வரலாறு வருமாறு:—

நெருங்கி அடர்ந்த காட்டுக்குள்ளே யானையின் முழக்கமும் புலியின் கர்ஜனையும் காட்டுப் பன்றியின் ஆரவாரமும் எங்கள் காதைத் தொளைத்தன. நிலத்திலே அங்கங்கே பாம்புப் புற்றுகளும் உடும்புகளும் எங்களுக்கு நடுக்கத்தை விளைவித்தன. நானும் விறலியும் என் சுற்றத்தினரும் சென்று கொண்டிருந்தோம்.

திடீரென்று ஒரு சத்தம் கேட்டது. நாங்கள் திடுக்கிட்டோம். என்ன மாயம்! மலைபோல நின்று கொண்டிருந்த யானை யொன்று இடிபோல முழங்கிப் பொத்தென்று கீழே விழுந்தது. அதன் மேலே பாய்வதற்காக வாயைப் பிளந்துகொண்டிருந்த புலி யொன்று காடு முழுவதும் கிடு கிடுக்கும்படி கத்திக்கொண்டு சுருண்டு தரையில் உருண்டது. அதன் வாயிலிருந்து இரத்தம் அருவி போலப் பாய்ந்தது. புலி விழுந்ததோ இல்லையோ உடனே அருகில் ஓடிக்கொண்டிருந்த கலைமான் ஒன்று திடு திடுத்து விழுந்து உயிர் நீத்தது. அந்த மானுக்கு அப்பால் உரலைப் போன்ற தலையை யுடைய காட்டுப் பன்றி ஒன்று நின்றிருந்தது. அதுவும் அடுத்தபடி தரைமீது உருண்டு மாய்ந்தது. எல்லாவற்றையும் கண் இமைக்கும் நேரத்தில் ஊடுருவிச் சென்ற ஓர் அம்பு கடைசியாக அங்கிருந்த ஒரு புற்றிற்குள்ளே சென்றது. அங்கும் அது வீணாகச் செல்லவில்லை. புற்றிலே கிடந்த உடும்பு அதற்கு இறுதி இரையாக ஆயிற்று.

எல்லாம் மிக விரைவில் நடந்தன. அம்பு யானையின்மேல் மின்னலைப்போல் பாய்ந்ததுதான் தெரியும். அதன் பிறகு அது தன் செயலால் தன்னைப் புலப்படுத்திக் கொண்டதே யொழிய அதைக் கண்ணால் பார்க்க இயலவில்லை. உடம்பு துளைக்கப்பட்ட யானையும் பிளந்த வாய் ரத்தம் கக்கக் கிடந்த புலியும், பதறி விழுந்து மடிந்த மானும், காட்டுப்பன்றியும், உடும்பும் அந்த அம்பின் வேகத்தையும் வெம்மையையும் கூர்மையையும் எங்களுக்கு விளக்கிக்கொண்டு பிணமாகக் கிடந்தன.

இந்த நிகழ்ச்சியைக் கண்டு ஸ்தம்பித்துப் போயிருந்த எங்களுக்கு முன் சிறிது தூரத்தே ஒரு வீரன் தோன்றினான். அம்பா அவற்றைக் கொன்றது? வல்வில் வேட்டையிலே சிறந்த அவனல்லவா கொன்றான்? நான் அவனை அடி முதல் முடி வரையிற் பார்த்தேன்.

'இப்படி அம்பை எய்யும் வேடனும் உலகில் இருக்கிறானா? இவன் இத்தமிருகங்களைக்கொன்று விற்கும் பொருட்டு வேட்டை செய்பவனாகத் தோற்றவில்லையே. இவனுடைய உடல் அமைப்பும் முகமலர்ச்சியும், இவன் அணிந்துள்ள ஆபரணங்களும், மார்பிலே பூசிய சந்தனமும் இவனை வெறும் வேடுவனாகக் காட்டவில்லை. இவன் சிறந்த செல்வன்; வீரன். ஆயின் இவன் யாராக இருக்கலாம்?' என்று நான் யோசனை செய்யலானேன். சட்டென்று எனக்கு ஒரு நினைவு உண்டாயிற்று. 'இவன் கொல்லி மலைக்குத் தலைவனாகிய ஓரியாக இருப்பானோ? அல்லவோ? அவனாகத்தான் இருக்கவேண்டும்' என்று நான் எண்ணினேன். அவனும் வரவர எங்களை நெருங்கினான். 'சரி. நாம ஒரு தந்திரம் செய்து பார்ப்போம். அப்போது உண்மை தெரிந்துவிடும்' என்று கருதி, என்னுடன் இருந்தவர்களைப் பார்த்து, "நான் இப்போது பாடப் போகிறேன்; விறலி, நீயும் சேர்ந்து பாடு; மிருதங்கத்தைச் சரி பண்ணிக்கொள்ளுங்கள்; யாழில் சுருதி சேர்த்துக்கொள்ளுங்கள்; பெருவங்கியத்தை ஊதத்தொடங்குங்கள்; சல்லரி வாத்தியத்தையும் ஆகுளி யென்னும் சிறு பறையையும் பதலை யென்னும் ஒரு கண் மாக்கிணையையும் அடிக்க ஆரம்பியுங்கள். எங்கே, என் கையில் அந்தப் பிரம்பைக் கொடுங்கள்'' என்று எல்லோரையும் சித்தப்படுத்தினேன். அந்தக் கானகத்தில் யானையும் புலியும் மானும் பன்றியும் உடும்பும் அவன் வல்வில் வெற்றிக்கு அடையாளமாகக் கிடந்த களத்தில், எங்கள் கானம் தொடங்கியது. நான் உத்ஸாகமாகப் பாடினேன். பாடிக்கொண்டே நாங்கள் அவனை அணுகினோம்.

அவனை அணுக அணுக எனக்கு அவனே ஓரி யென்பது உறுதியாயிற்று; இல்லாவிட்டால் அவனது நடையிலே அவ்வளவு கம்பீரம் இருக்குமா? எங்கள் பாட்டை அவன் எவ்வளவு கவனமாகக் கேட்டான்! பாணர் பாட்டைக் கேட்டுக் கேட்டுப் பழகிய காது அவன் காது. அந்தப் பாட்டை அளந்தறியும் சிறந்த கருவி அவன் செவி. வேட்டை செய்த அயர்ச்சியில் எங்கள் சங்கீதம் ஒரு மருந்தாக அவனுக்கு உதவியது. அவன் முகமலர்ந்தான்.

அந்த மலர்ச்சி என் குரலுக்கு ஒரு கிளர்ச்சியைக் கொடுத்தது. கீழ் ஸ்தாயியிலே சஞ்சாரம் செய்தேன்; மத்திம ஸ்தாயிக்குச் சென்று ஸ்வரங்களை மாறி மாறிப் பாடினேன். மேலும் சென்றேன்; என் குரல் உச்ச ஸ்தாயியையும் எட்டியது. எனக்கே என் பாட்டு என்றும் இல்லாத இன்பத்தை ஊட்டியது. 'இவன் கானகத்திலே வாழும் முரட்டு வேடனல்லன்; கலைநுகர்ச்சியினால் இன்பத்தை அடையும் ஓரிதான்' என்பதை ஒவ்வொரு கணமும் உணர்ந்தேன்.

ஒரு வகையாக ஆரோகண அவரோகணக்கிரமப்படி பாடிய பிறகு பாட்டை முடிவுக்குக் கொண்டு வரலாமென்ற எண்ணம் உண்டாயிற்று. பிறகு அவன் பெயர்வரும் சிறுபகுதியைக் கடைசியில் அமைத்துப் பாடினேன். அதுவரையில் கிளர்ந்த முகத்துடனும் ஆவலுடனும் பாட்டைக் கேட்டுக்கொண்டிருந்த அவன் தன் பெயரை நான் சொன்னவுடன் நாணத்தால் முகம் கவிழ்ந்தான். 'உயர்ந்த மக்களின் இலக்கணம் அல்லவா இது? இவன் ஓரி என்பதற்கு இதைக்காட்டிலும் வேறு ஆதாரம் என்ன வேண்டும்?' என்று நான் குதூகலித்தேன்.

பாட்டை முடித்துவிட்டு, "நாங்கள் எவ்வளவோ தேசங்களைச் சுற்றிப் பார்த்திருக்கிறோம்; வீரர்களையும் வேட்டையாடுவோர்களையும் கண்டு களித்திருக்கிறோம். ஆனாலும் உன்னைப்போல இவ்வளவு சிறப்பாக வேட்டையாடுவோர் யாரும் இல்லை" என்று நான் கூறினேன். அவன் நான் கூறியதைக் கேளாதவன்போல் இருந்ததன்றி, பின்னும் நான் ஏதேனும் தன்னைப் புகழ்ந்து பேசுவேனோ என்று எண்ணி நான் மேலும் பேசுவதற்கு முன் தன் கையிலிருந்த புழுக்கிய மான்மாமிசத்தைத் தந்தான். அவன் வேட்டையாடிப் பெற்ற மானின் தசை அது. நல்ல தேனையும் குடிக்கத் தந்தான். புத்துருக்கு நெய்யைப் போல இருந்தது அது. நாங்கள் உண்டு பசியாறினோம். அவன் அதோடு நிற்கவில்லை. தன் மலையிலே பிறந்த பொன்னையும் பல மணிகளையும், "இவைகளை அங்கீகரித்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லிக் கொடுத்தான்.

அவன் கொல்லி மலைக்குத் தலைவனாகிய வல்வில் ஓரியென்பதைப்பற்றிப் பின்னுமா சந்தேகம் இருக்கும்? அவன் தனக்கென்று ஒன்றையும் வைத்துக்கொள்ளாமல் கொடுப்பவன். அவன் செய்த வேட்டை எங்களுக்கு உணவைக் கொடுத்தது. அவன் பெற்ற பொன்னும் மணியும் எங்களுக்குப் பரிசிலாக உதவின.

—கலைமகள்

"யுத்த முயற்சிக்குத் தொழிலாளர் ஆதரவு தேவை"

தொழிற் கட்சிக் கூட்டத்தில் தீர்மானம்

சென்ற சனிக்கிழமை பின்னேரம் கொழும்பு நகரசபை மண்டபத்தில் அகில இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸினதும் இலங்கைத் தொழிற் கட்சியினதும் வருடாந்த மகாநாடு நடைபெற்றது. அவ்வமயம் நூற்றுக்கணக்கான பெண்தொழிலாளிகள் உட்படஏராளமான ஜனங்கள் குழுமியிருந்தனர்.

வரவேற்புக் கொம்மிற்றித் தலைவரான டக்டர். வி. டப்ளியூ. எஸ். பெர்ணாண்டோ சபையோரை வரவேற்றுப் பேசுகையில் எல்லா வகுப்பினர்களுக்கும் நியாயம் வழங்குவதே இந்நாட்டிலுள்ள தொழிலாளர் இயக்கத்தின் நோக்கம் என்று குறிப்பிட்டார்.

திரு. குணசிங்காவின் தலைமைப் பிரசங்கம் அடுத்தபடியாக நடைபெற்றது.

யுத்தத்திற்காக இலங்கையில் நடைபெறும் முயற்சிகள் யாவற்றிற்கும் இந்நாட்டிலுள்ள தொழிலாளர்கள் ஆதரவளிக்க வேண்டுமென்று ஒரு தீர்மானத்திற் கேட்டுக் கொள்ளப்பட்டது. மற்றும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

நீர்கொழும்புப் பட்டினசபை உபதேர்தல் முடிவு

ஆசிரியர் வெற்றி பெற்றார்

நீர்கொழும்புப் பட்டினசபை இரண்டாவது வார்டின் உபதேர்தல் சென்ற சனிக்கிழமையன்று நடைபெற்றது. இத் தேர்தலில் நீர்கொழும்பு மாரிஸ்டெல்லாக் கல்லூரியின் ஆசிரியர் திரு. எம். ஜோசப் மேற்படி வார்டின் அங்கத்தவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். டக்டர் குருஸ் டாப்ரேரா தமது பதவியை ராஜினாமாச் செய்ததினால் ஏற்பட்ட காலிஸ்தானத்திற்கே இந்த உபதேர்தல் நடைபெற்றது.

தேர்தலில் திரு. ஜோசப்புக்கு 220 வாக்குகள் கிடைத்தன. அவரோடு போட்டியிட்ட அத்வக்காத் திரு. வி. யோகரத்தினத்திற்கு 110 வாக்குகள் கிடைத்தன.

ஆட்டுத்திருடர் கையோடு அகப்பட்டனர்

எதிரிகளுக்குத் தனித்தனி 25 ரூபா அபராதம்

யாழ்ப்பாணம் 12-11-40

நாயன்மார்கட்டுக் குளக்கரையில் அவ்வூர் முருகர்-சரசுமுத்தர் தனது மறி ஆட்டொன்றை மேயக்கட்டிவிட்டுத் தனது முயற்சிக்குச் சென்றிருந்தார். ஆடு மேய்ந்து கொண்டு நின்ற சமயத்திற் சின்னக்கடையில் வசிக்கும் கந்தர் வீரவாகுவும் சோனகதெருவில் வசிக்கும் உசனூர் அப்துல்காதருமாக அவ்வாட்டைக் களவாகப் பட்டப்பகலில் அவிழ்த்துச் செல்ல எத்தனித்தபோது பிடிபட்டார்கள். இச்சம்பவம் அவ்வூர் விதானையாருக்கு அறிவிக்கப் பட்டுப் பின்னர் இவர்கள் இருவர் மீதும் களவெடுத்ததாகக் குற்றஞ் சாட்டி ஒரு வழக்குத் தொடரப்பட்டது. இவ்வழக்கு விசாரணை செய்யப்பட்டபின்னர்ப் பொலிஸ் நீதிபதி திரு. E. V. R. சமரவிக்கிரம எதிரிகளைக் குற்றவாளிகளெனக் கண்டு அவர்கட்குத் தனித்தனி ரூபா 25 அபராதம் விதித்தார். அபராதப்பணம் இறுக்கத் தவறினால் ஒருமாத மறியற்றண்டனை அனுபவிக்க வேண்டியது என்றும் கூறப்பட்டது.

ந-கி

மோதிரத் திருடனுக்கு ரூபா20 அபராதம்

தாராக்குளத்தடியில் வசிக்கும் லுக்காஸ்-சேபஸ்டியர் என்பவருடைய ரூபா 17-50 சதம்பெறுமதியான மோதிரத்தையும் சட்டை யொன்றையும் களவாடினதாக மாட்டின்றோட்டில் வசிக்கும் V. மாட்டின் என்பவன் மீதுதொடரப்பட்ட வழக்குப் பொலிஸ் நீதிபதி திரு. E. V. R. சமரவிக்கிரம முன்னிலையில் விசாரணைக்கெடுக்கப்பட்டு விசாரணையின் பின் நீதிபதி எதிரியைக் குற்றவாளியெனக்கண்டு ரூபா 20 அபராதம் விதித்தார். அபராதப்பணம் இறுக்கத்தவறினால் 3 கிழமை மறியற்றண்டனை அனுபவிக்கவேண்டியது என்றுங் கூறினர்.

ந. கி

ஹாக்கிக் கலவரத்திற் கொல்லப் பட்டார்

விளையாட்டு வினையாக முடிந்தது

டோலாப்பூர் நவ 9

பார்தாப்பூர் என்னு மிடத்தில் நடந்த ஒரு ஹாக்கிப் போட்டி விளையாட்டை நடத்தியவர் கூறிய ஒரு தீர்ப்புச் சம்பந்தமாக விளையாட்டில் கலந்து கொண்ட இரு கோஷ்டிகளுக்குமிடையே நடந்தசண்டையில அந்த மத்தியஸ்தர் கொல்லப்பட்டு விட்டதாக இங்கு தகவல் கிடைத்திருக்கிறது. இரு கட்சிகளையுஞ் சேர்ந்த பலருக்குக் காயங்களும் ஏற்பட்டனவாம்.

வாழை நாரிலிருந்து கயிறு உற்பத்தி

கும்பனித்தெருத் தொழிற்சாலையில் நடைபெறுகிறது

கும்பனித் தெருவிலுள்ள வர்த்தக இலாகாவைச் சேர்ந்த கயிறு உற்பத்தித் தொழிற்சாலையில் வாழை நாரிலிருந்து கயிறு உற்பத்தி செய்யப்படுகிறது.

இதுவரை உற்பத்தி செய்யப்பட்ட கயிறு வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகும் கயிற்றைப் போலப் பலமுள்ளதாக இல்லை. ஆதலால் மேற்கொண்டு பரீட்சித்துப் பார்க்கும்படி சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. உள்நாட்டுக் கயிறு எவ்வளவு காலத்திற்கு உபயோகிக்கும் என்பதை நிர்ணயிப்பதற்கும் பரீட்சைகள் நடைபெறுகின்றன.

நியாயவாதி-நீதிபதி வாக்குவாதம்

கோட்டாரின் போக்குக்கு ஆக்ஷேபம்

கண்டி டிஸ்திறிக்கோட்டுச் சம்பவம்

கண்டி, நவ, 8உ

இன்று கண்டியிலுள்ள அடிஷனல் டிஸ்திறிக்கோட்டில் நீதிபதி திரு. டி. எப். வி. றாபாஸெக்கும் வழக்கறிஞர் திரு. என். நடேசனுக்குமிடையில் ஒருசிறு வாக்குவாதம் நடந்தது.

திரு. நடேசன் ஒருவழக்குச் சம்பந்தமான சிலஅம்சங்களை விளக்கிப்பேசும்போது தாம்பேசுவதற்குச் சிறிதுநேரம் வேண்டியிருந்தபோதிலும் தமது பேச்சுக் கோட்டாருக்கு அநுசரணமாயிருக்குமென்று குறிப்பிட்டார்.

கொழும்பு வழக்கறிஞர்களிடம் இத்தகைய விஷயங்களைத்தாம் கண்டிருப்பதாக நீதிபதி குறிப்பிட்டு அவர் பேசவேண்டியவற்றைப் பேசிமுடிக்கும்படி திரு. நடேசனைக் கேட்டுக்கொண்டார்.

திரு.நடேசன்தமது பேச்சில்வழக்கின் உண்மைகள் வெகுசாதாரணமானவையென்றும் அதில் ஒருசில விஷயங்கள்மாத்திரம் அடங்கியிருக்கின்றனவென்றும் குறிப்பிட்டார்.

நீதிபதி:—அங்ஙனமாயின் அதற்காகஏன் இவ்வளவு நேரத்தை வீணாக்க வேண்டும். வழக்கின் உண்மைகள் வெகுசாதாரணமானவையென்றுதான் நானும் அபிப்பிராயப்படுகிறேன். சிலவிஷயங்களைத் திருப்பி எடுத்துக்காட்டுவதில் அதிக நேரம் செலவாகின்றது.

திரு. நடேசன்:—குறிப்பிட்டசில உண்மைகளைப்பற்றிச் சிலசாட்சிகளை விசாரிக்கவேண்டுமென்று நான் விரும்பியதால் வழக்கு இவ்விதம் விரிந்து விட்டது. கோட்டாரின் மனோபாவத்தைப் பார்க்கும்பொழுது நான்எனது கட்சிக்காரர்களுக்குச் செய்யவேண்டிய நியாயமான கடமைகளைச் செய்யமுடியாது என்று நான் உணருகிறேன். கோட்டாரின் மனோபாவம் எப்பொழுதும் முரட்டுத்தனமாயிருக்கிறது. நாம் கோட்டாருக்குச் செலுத்தவேண்டியமரியாதைகளைச் செலுத்தத் தவறுவதில்லை. அப்படியிருந்தும் கோட்டாரவழக்கறிஞர்கள்மீது தமக்குள்ள அதிகாரத்தை அளவுக்கதிகமாகப் பிரயோகிக்க முயற்சிக்கின்றனர். கோட்டாரின் மனோபாவம் அப்படியிருப்பின் நான்இனிமேல் கோட்டில் அஜராகமுடியாது.

திரு. நடேசன் மேலும் இவ்விதம் குறைகூறிக்கொண்டேபோகையில் நீதிபதி அவரைத்தடுத்து அவர்பேசவேண்டியவற்றைப் பேசும்படி கேட்டுக்கொண்டார்.

திரு. நடேசன் நீதிபதியின்மனோபாவத்தைப்பற்றியே மேலும் பேசினார். அதன்பேரில் நீதிபதி அவரை உட்காரும்படி உத்தரவிட்டார். திரு. நடேசன் தமதுபேச்சை முடித்துக் கொண்டு அமர்ந்தார்.

இவ்வழக்கில் மனுதார்களான ஆர். எம். ரம்புக்பொத்தா குமாரிஹாமியும் திரு. ஜே. ஏ. ரம்புக்பொத்தாவும்கண்டியிலுள்ளநகைவியாபாரியானதிரு டப்ளியூ. ஏ. டி. டி. சில்வாவிடமிருந்து ரூபாய் 15200 பெறுமதியான ஆபரணங்களைத் திரும்பப் பெற்றுத்தரும்படி கோரியிருந்தனர்.

நீதிபதியின் தீர்ப்பு நவம்பர் 11-ந் திகதிவரை தவணையிடப்பட்டது.

இடம் மாறியிருக்கும் இருதயம்

மாணவனிடம் கண்ட அபூர்வ அமைப்பு

தியாலகொடை,நவ,8உ

தியாலகொடை ரோமன் கத்தோலிக்க ஆண்கள் ஆங்கில பாடசாலையைச் சேர்ந்த 13 வயதுடைய ஒரு மாணவனின் இருதயம், அவனுடைய மார்பின் வலப் புறத்தில் இருப்பது வைத்திய சோதனையின்போது கண்டு பிடிக்கப் பட்டது. பாடசாலை வைத்திய உத்தியோகஸ்தர் டக்டர். எஸ். அரியரத்தினம் சிறுவனைச் சோதித்துப் பார்த்த பின்னர் இருதயம் அவ்வாறு இடம் மாறி அமைந்திருப்பது மிகவும் அபூர்வமென்று சொன்னார்.

இலக்கணமும் இலக்கியமும்

திரு. சே. ரே. இராமசாமிப்பிள்ளை அவர்கள்

உலகம் தோன்றிய நாள்தொட்டுப் பல்லாயிரம் மொழிகள் வழங்கி வந்திருக்கின்றன. உலக வழக்கிலும், செய்யுள் வழக்கிலும், வழங்கி வந்த மொழிகள் இதுபோழ்து பேச்சு வழக்கற்றுச் செய்யுள் வழக்கில் மட்டும் இருந்து வருகின்றன. அவை சமஸ்கிருதம், அராபி, கிரீக், இலத்தீன்முதலியன. உலக வழக்கு. செய்யுள் வழக்கு இரண்டினும் வழங்கிவருபவை ஒருசில மொழிகளே. அவைகளுள் நமது தமிழ் மொழியும் ஒன்று.

அம்மொழிகள் யாவும் உலக வழக்கு அழிந்தமைக்கு அம்மொழிகளின் உரத்த ஓசை, அளவுக்கு மீறிய முயற்சியான ஒலித்தல், ஒரே எழுத்துக்குப் பல ஒலிக்குறிப்பு, ஒரே எழுத்தை ஒலி வேறுபடுத்திப் பல எழுத்தாக ஆக்கல், எழுத்துக்களைத் தாம் தனியில்லாமல் எண்ணுதல், தேவபாடையெனப் பிறரெவரும் படிக்கவும், கேட்கவும் கூடாதவாறு தடுத்து வைத்திருந்தமை முதலிய காரணங்களேயாம்.

நமது தமிழ்மொழிஒன்றுமட்டும், பண்டைக்காலத் தண்டமிழ் வரம்பிகவாது யாத்த தொல்காப்பிய இலக்கண மரபு பிழையாது இதுகாறும் வழக்கில் வருதற்குக் காரணம், அதன் இயற்கையொலி, முயற்சி மிகுதியின்றி ஒலித்தல், வல்லோசை, மெல்லோசை, இடையோசை, நெட்டொலி, குற்றொலிகள் சரிநிகராக இருத்தல்; சொற்கள் யாவும் ஓரெழுத்து, ஈரெழுத்து, மூவெழுத்து, நான்கெழுத்துச் சொற்களாகவே பெரும்பான்மையும் இருத்தல், பேசற்கும், பாடற்கும் எளிமை, இனிமை பயத்தல், முதன்மையாக உயர்ந்த பொருள்களை முதல் முயற்சியிற் பிறக்கும் எழுத்துக்களைக் கொண்டே குறித்தல், குறிப்பிடும் பெயர்கள் யாவும் காரணம்பற்றியே ஆக்கப்பட்டிருத்தல், கருத்துக்கள் யாவும் தெளிவு விளக்கமாயிருத்தல் முதலியனவும் அதன் நற்பண்புகள் பிறவுமேயாம்.

ஓரெழுத்துச் சொற்கள், ஆ, ஈ, ஓ, ஏ, கா, தா, நா, பா, மா, முதலியன. இவைகளுள் ஆ, என்பது யாவர்க்கும் பயனும் தன்மையுடையது என்னும் காரணமாய்ப் பசு மாட்டையும், ஈ, என்பது, 'ஈ' என்னும் ஒலிக்குறிப்போடு செல்லுந்தன்மையுடையது என்னும் காரணமாய் ஒரு சிறு பறவையையும், கா, என்பது மக்களையும், பிறவுயிர்வகைகளையும் அதன், இலை, பூ, காய், பழம், விதை முதலியவற்றால் காப்பாற்றுந் தன்மையுடையது என்னும் காரணமாய் மரங்கள், செடி, கொடிகள் நெருங்கிய காட்டையும் உணர்த்துகின்றது. மற்றைய சொற்களும் இவ்வாறே. இவ்வோரெழுத்தொரு மொழிகளிலேயே எத்தனை நுணுக்கம் வாய்ந்த கருத்துக்களும், சொல்லுதலெளிமையும் பிறவும் அமைந்திருக்கின்றன.

தமிழ் முதுமக்கள் மிகவுயர்ந்த பொருள்களாகக் கருதுபவைகளை உயிரெழுத்தில் அங்காத்தலுடன் பிறக்கும் முதலொலி எழுத்தாகிய அகரத்தையே அதனதன் முதலெழுத்தாகக் கொண்டு குறியீடு செய்திருப்பதன அருமை மற்றை யெம்மொழி வல்லுநர்கட்கும் இசையாததொன்றும்.

தாயை அம்மை, அன்னை, அஞ்ஞை, ஆய், யாய், ஆத்தாள் எனவும் தந்தையை அப்பன்,அச்சன்,ஐயன், எனவும், தன்னின் மூத்தோர்களை அண்ணன், அக்காள், அம்மான், அத்தை எனவும், கடவுளை அரன், அரி, எனவும், உயிரை ஆவி ஆன்மா எனவும், உடலை யாக்கை எனவும், உலகை அண்டம் எனவும், பிறவும் உயர்ந்தபொருள்களை, அன்பு,அறம், அழகு, அமைதி, அருள், அறிவு எனவும் முதலிற்சேர்த்திய அகரவுயிரெழுத்தையே அவ்வப்பொருள்களின் முதலெழுத்தாகக் கொண்டு அமைத்த நம் பழந் தமிழ்ப் பெரியார்களின் அறிவாற்றலை என்னென் பேம்! என்னென்பேம்!

இத்தனை நுணுக்கம் வாய்க்க நம் தமிழ்மொழியில் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர்த் தெய்வப்புலமைத் திருவள்ளுவரால் இயற்றப்பெற்ற திருக்குறள் என்னும் அறநூல் ஏனைய எம்மொழியினும் காணப்பெறாத அரும்பெறற் கருத்துக்களையும், சில எழுத்துக்களில் பலவகைப் பொருளை உள்ளடக்கித் திட்பநுட்ப மிக்கதாய்த் தனக்கு ஒப்புயர்வில்லாச் செப்பமுடையதாய்த் திகழ்கின்றது. அந்நூலினும் "அகரமுதல" என்ற அகரவொலியை இயற்கையிலேயே இவ்வாசிரியர் துவங்குகின்றார். இந்நூலின் எவ்வறத்தைக் கூறினும் வரையறுத்துக் கூறும் பெற்றி மற்றை யெம் மொழியாசிரியர்க்கும் புலனாகாது.

கல்வி, கல்லாமை, ஈகை முதலிய எல்லா அறங்களையும் இவர் கூறுமாப்போல் யாருங் கூறலிது. கல்வியைக் கூறும்போது "கற்க கசடறக் கற்பவை கற்றபின்— நிற்க அதற்குத் தக" என்று கூறுகின்றார். இப்பாட்டின் பொருள் ஒருவன் கற்க வேண்டிய நூல்களை நன்குகக் கற்க வேண்டும். கற்றபின் அக்கற்ற நூல்களிற்சொல்லியவாறு நடத்தல் வேண்டும் என்பது. கற்க, நிற்க என்ற இரண்டு பயனிலைகளை நிறுத்தி எவ்வளவு சுருக்கமாகப் படித்தால் அதன்படி நடக்க வேண்டும் என்று ஆசிரியர் குறிப்பிடுகின்றார். கற்பவை கசடறக் கற்க என்பதில் கற்க வேண்டாதன பலவுள. அவைகளை விரும்பிக் கற்க வேண்டாம். அவைகளைக் கற்றும் பயனில்லை. உங்கள் வாழ்நாளும் போதா என்று இன்னவெல்லாம் உள்ளடக்கியே 'கற்க கசடறக் கற்பவை யென்றார்.' அப்படிக் கற்றுறும் பயனில்லையென்பார். அதன்படி நடக்காவிட்டால் 'அதற்குத்தக நிற்க,' என்றார். இன்னும் இவ்வாசிரியர் இந்நூல் முழுதும் இவ்வாறே நயம்படக் கூறுவர்.

ஆதலால் இத்திருக்குறளே உயிர் நூல், உளநூல், ஒலிநூல், விலங்கு நூல், பொருள்நூல், அறநூல், இன்பநூல், வீட்டுநூல் பிற யாவுமாகும். இந்நூல்போல் வேறெம்மொழியிலும் காணப்படவில்லையென்று மேல்நாட்டு ஆசிரியர்கள் நடுநிலை பிறழாது வாயாரப் புகழ்ந்து கூறியிருக்கின்றார்கள். இதுபோழ்து இந்நூலின் பெயர்கூட எத்தனைத் தமிழ்மக்கட்குத் தெரியும் என்பதுவே ஐயப்பாடாக இருக்கிறது.

இத்திருக்குறள் ஒன்றன்றிப் போர் முறை, பண்டைக்காலத் தமிழ்நாட்டு வரலாறு, பெண்வரலாறு, பெண்மக்கள் வீரம், புரவலர், புலவர் வரலாறு முதலியவற்றைக் கூறும் புறப்பாட்டும், இன்பத்தையே குறிக்கோளாகக் கூறும் அகநானூறு, ஐங்குறுநூறு, கலித்தொகை முதலிய நூல்களும் தமிழ்மக்கள் அகநாகரிகம், புற நாகரிகம் யாவையும் ஒருங்கே எடுத்து முற்றமுடிய விளக்கும் தொல்காப்பியமும் இன்ப அன்பைப் பெருக்கும், தேவார, திருவாசகம், நாலாயிரப் பிரபந்தம், பெரிய புராணம்முதலிய நூல்களும், இயற்கைப் பொருள்களையும், பிற அழகிய பொருள்களையும் நலமெடுத்துப் புனைந்துரைக்கும் கவின்பெரு முழு மாணிக்கங்களாய மற்றைய வெல்லா வகை நூல்களும், மனமொடுக்கக் காட்டியளிக்கும் சித்தர் நூல்களும், வைத்திய நூல்களும் எண்ணிறந்து "எல்லாம்

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் விக்கிரம ஹூ
ஐப்பசிமீ உகஉவியாழக்கிழமை

இக்காலத்து ஊட்டப்படும் விபரீதக் கல்வி

"அறம் பொருளின்பம் வீடடைதல் நூற்பயனே" என்பது தான் கல்வி விஷயமாக எங்கள் முன்னோர் கொண்டுள்ள கொள்கையாகும். புருஷார்த்தங்களென்று சொல்லப்படும் இந்த நான்களுள் ஒன்றையாயினும் கற்போன் பெறுதலில்லையாயின் அக்கல்வி பயனற்ற கல்வியாகும். பிற்காலத்தில் அரசினர் எங்கட்கு ஊட்டத் தொடங்கியகல்வியினால் மேலே சொல்லப்பட்ட புருடார்த்தங்கள் நான்கினையும் பெறுதலில்லையாயினும் பொருளென்ற ஒரு பயனாவது பெறத்தக்கதாயிருந்தது. இங்குள்ள மக்களுள் எத்தனையோ பேர் ஆங்கிலத்தைக் கற்று ஒரு அளவிற்குத் தமிழையும் படித்து அரசாங்க உத்தியோகம்பெற்றும் ஆசிரியர்களாகவும் வேறுங் கல்வியைக்கொண்டு செய்யக்கூடிய தொழில்களைச் செய்தும் பொருளீட்டிச் செவ்வனே சீவியத்தை நடத்தி வந்தார்கள். அக்காலத்திலே வித்தியாசாலை வைத்து நடத்துபவர்களும் ஆசிரியர்களுமே கல்வியின் முறையைத் தெரிந்து பிள்ளைகட்கு ஏற்ப ஊட்டிவர, வித்தியாதரிசிகள் அக்கல்வி முறையை ஆமோதித்து பரீட்சித்து வர, அரசினர் நன்கொடைப்பணம் உதவி வந்தனர்; ஆனால், இக்காலத்தில் வித்தியாதிகாரிகளின் திட்டங்கட்கு அமைந்தே கல்வியூட்டுதல் கட்டுப்பாடாயிற்று; இக்கட்டுப்பாடுகளுட் பொருத்தவனவு முண்டு பொருந்தாதனவுமுண்டெனலாம்.

முற்காலத்தைக் காட்டிலும் இக்காலத்திற் பிள்ளைகள் படித்தற்காகிய செலவுஞ் சிரமமும் மிக அதிகப்பட்டுவிட்டது; ஏழைப்பிள்ளைகள் உயர்தரக் கல்வியைப் படித்தல் அசாத்தியமாகிவிட்டதெனச் சொல்லினுந் தவறாகாது; கல்வி பயிலுதற்கான செலவு அதிகப்பட, இக்கல்வியைப் பயின்றவர்கள் உத்தியோகம் பெறுதலுங் கஷ்டத்தின்மேற் கஷ்டமாய்விட்டது; இதனாற் பிள்ளைகளிடத்திற் படிக்கும் ஊக்கமும் பெற்றோரிடத்துத் தம் பிள்ளைகளைப் படிக்கவைக்கும் ஊக்கமுங் குன்றத்தலைப்பட்டன; இவை இங்ஙனமாக, தேகாப்பியாசத்திற்கென ஆரம்பத்திற் றொடங்கப்பட்ட பந்து விளையாட்டு காலகதியின் முதிர்ந்த கல்வியைக் காட்டிலும் விளையாட்டே பிரதானமாக இப்பொழுது நிற்கின்றது. காலந்தோறும் பள்ளிக்கூடங்களுடன் எதிரிசாதித்து விளையாடப்படும் பந்து விளையாட்டு பிள்ளைகளிடத்துள்ள கல்வியார்வத்தைக் கெடுத்து விட்டதென அநுபவம் வாய்ந்த ஆசிரியர்கள் சொல்லக் கேட்டுள்ளோம். மேலும்; ஆங்கில கலாசாலைகளில் தமிழ்க்கல்வி சமயநூற் கல்வி யென்னுமிவைகளிடத்திற் பிள்ளைகளுக்கு ஆர்வங் குறைந்து காலகதியில் அக்கல்விகளில் வெறுப்பும் உண்டாய்விட்டதெனலாம். இனி இக்கல்வி நம்ம சாதிக்குஞ் சமயத்திற்கும் பொருந்தமான முறையிற் கற்பிக்கப்படுதலின்றி முழுவதும் மேனாட்டு முறையைப் பின்பற்றியே கற்பிக்கப்படலாயிற்று. வித்தியாசாலைகளில் இடையிடையே நடத்தப்படும் விருந்து முதலிய விஷயங்களிலும் சிற்சில கலாசாலையில் மேனாட்டு முறையே கைக்கொள்ளப்பட லாயிற்று. அன்றியும் உத்தியோகம் அகப்படாத பட்சத்தில் இந்தப் பிள்ளைகள் வேறு ஏதுந் தொழில் செய்து சீவியம் நடத்துவதற்கு இக்காலத்திற் கல்வி உதவாதிருத்தலோடு மாத்திரம் நில்லாது அதற்கு இடையூறாகவும் நிற்கின்றதெனலாம்.

ஆண்பிள்ளைகளின் கல்வி இங்ஙனமாக, இனி இங்குப் பெண்பிள்ளைகட்கு இக்காலத்தில் ஊட்டப்படுங் கல்வியைப் பற்றி ஆராய்வோம்; பெண்பிள்ளைகளாயுள்ளார்க்குத் தமிழ்க்கல்வியோடு ஆங்கிலக்கல்வியுஞ் சரிவர ஊட்டப்படுதல் ஆவசியகம்; பெண்கள் பிற்காலத்தில் மனைக்கிழத்திகளாக விருந்து இல்லற தருமத்தை எங்கள் சாதிய முறைப்படியும் சமய ஒழுங்கின்படியும் நடத்துதற்கான கல்வி அவர்கட்கு இன்றியமையாதது. தாம் நற்றாயாராக விருக்குங் காலத்தில் தம்மையும் தம் பிள்ளைகளையும் சுகாதாரமுறையிற் பேணி நடத்தற்கான கல்வியுணர்ச்சியும் பெண்பாலார்க்கு வேண்டியதாகும். ஆனால் இவைகள் இக்காலத்திற் கற்பிக்கப்படுதல் இல்லையெனலாம், ஆண்களுக்குப் பயிற்றப்படும் அந்த விபரீதக் கல்வியே பெண்பிள்ளைகட்கும் பெரும்பான்மையும் பயிற்றப் படுகின்றதெனலாம். இந்த முறையான கல்வி பெண்களிடத்தில் இன்னும் அதிக விபரீதத்தை ஆக்கிவிடும்; பெண்களுக்குச் சங்கீதம் பயிற்றத் தொடங்கி ஆபாசமான சங்கீதம் பயிற்றப்படுகின்றது, அச் சங்கீதம் அவ்வளவில் மாத்திரம் நின்றுவிடவில்லை; பள்ளிக்கூடங்களிற் கன்னியர் நடிக்கவுந் தலைப்பட்டுக்கொண்டார்கள். அவ்வளவோடமையாது சிறுமியருங் கன்னியரும் ஆணுடை தரித்து நடிக்கவும் பயிற்றப்பட்டிருக்கிறார்கள். வித்தியா பகுதியார் பெண்பாலார்க்கும் "டிறில்" எனப்படுந் தேகாப்பியாசத்தை விதித்துள்ளனர். இந்த விபரீதமெல்லாம் எதற்கென்று யாரும் பழைய முறையிலுள்ள பெரிய மனுஷர் வினவினால் "இரு பாலார்க்குஞ் சமத்துவக் கல்வி யுதவுதல் தானே மேனாட்டுக் கொள்கை அதை இந்நாட்டிலும் உதவத் தானே வேண்டும்" என்று கல்வி சம்பந்தமான அதிகாரிகள் நியாயம் பேசுகின்றார்கள். இவ்விஷயமாக இன்னுஞ் சிறிது நுணுக்கமாக எழுதப் புகின் மனத்தாபங்கள் நேருதல்கூடும். இத்தீமையைக் காலகதியில் அனுபவத்திற் கண்டு திருத்திக்கொள்வார்களாக.

இந்த இலங்கை நாட்டினர்க்கு, இலங்கை மக்களுள்ளும் நமது யாழ்ப்பாணத்து மக்களுக்குத் தென்னிந்திய கல்வி முறை பெரிதும் பயன்படும். அந்த முறையான கல்வி இங்குக் கைக்கொள்ளப்படும்வரையில் இங்குள்ள மக்கள் ஆண்பாலாராக, பெண்பாலாராக எவர்க்கும் ஈடேற்ற மில்லையெனலாம்.

பிருத்தானிய யுத்த தேவைக்குக் கடன்

பிரிட்டன் யுத்த தேவைக்கு இலங்கையர்கள் நேரடியாகக் கடன் கொடுத்து உதவக்கூடிய வசதியைக் குடியேற்ற நாட்டு மந்திரி இலங்கை அரசாங்கத்துக்கு அளிக்க முன்வந்திருப்பதாக அறியப்படுகிறது. இதனால் பணங்கொடுப்போருக்கு அதிக சகாயமுண்டென்று தெரிகிறது. உத்தேசிக்கப்பட்டிருக்கும் இத்திட்டம் இலங்கை அரசாங்கம் பிருத்தானிய அரசாங்கத்துக்குக் கடன் கொடுப்பதற்காக ஆரம்பித்திருக்கும் யுத்தக் கடன் நிதியைப் போலவே இருக்கும்.

இப்புதிய கடன் நிதிக்கு இலங்கை அரசாங்கம் மாத்திரமல்லாது பிருத்தானிய அரசாங்கமும் உத்தரவாதமளிக்கும்.

குடியேற்றநாட்டு மந்திரியின் தீர்மானம் வெகு சீக்கிரத்தில் மந்திரி சபையால் ஆலோசனை செய்யப்படுமென்று தெரிகிறது.

கொடுவாக்கத்திப் பிடியால் அடி

எதிரிகளுக்கு அபராதமும் நன்னடத்தையும்

13-11-40

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டையில் வசிக்கும் செல்லன்-கல்லையா அல்லூர்த் தம்பிப்பிள்ளை-கந்தையாவுக்குக் கொடுவாக்கத்தியின் பின்புறத்தாலடித்துப் படுகாயம் வருவித்ததாகவும் குற்றஞ்சாட்டி ஒரு வழக்குத் தொடரப்பட்டிருந்தது. இவ்வழக்கில் காயக்காரன் எதிரியினுடைய கடையைக் கடந்து சென்ற போது எதிரி அவனுக்கு அடித்துக் காயமுண்டாக்கியதாகக் கூறப்பட்டது. அல்லாமலும், எதிரி காயக்காரனின், தாயாரை வைப்பாட்டியாக வைத்திருப்பதாகவும் கூறப்பட்டது. காயக்காரனின் சம்மதத்தோடு சமாதான முறையில் எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டான். மேலும் எதிரி காயக்காரனின் தாயாரையும் அவளுக்குப் பிறக்கும் பிள்ளையையும் (இப்போது அவள் கர்ப்பவதியாயிருக்கிறாள்) தாபரிப்பதாக ஒப்புக் கொண்டான். நீதிபதி எதிரிக்குக் கோடு முடியும்வரை மறியலும்ரூபா 50 அபராதமும் 100 ரூபாவில் ஆறு மாதத்திற்கு நன்னடத்தைப் பிணையும் விதித்து அபராதப் பணம் கட்டப்பட்டால் காயக்காரனுக்கு ரூபா 15 கொடுக்க வேண்டியதென்றும் கூறினர்.

ந-சி

தாபரிப்பு வழக்கின் விளைவு

ஆஸ்பத்திரியில் காயமுற்றவரின் வாக்கு மூலம்

யாழ்ப்பாணம், 13-11-40

சிவில் ஆஸ்பத்திரிக்குக் கோப்பாயில் வசிக்கும் நாகலிங்கன் பெண் நாகியும் இவருடைய சகோதர முறையான வள்ளியும் கடுங்காயங்களோடு சிகிச்சைக்காகக் கொண்டுவரப்பட்டனர். இவர்கள் இருவருடைய நிலைமையும் மிக ஆபத்தாகவிருந்தமையால் இருவருடைய வாய்முறைப்பாடுகளும் நீதிபதியால் வரையப்பட்டன.

நாகலிங்கன்பெண் நாகி இச்சம்பவத்திற்கு நாலு வருடங்களாகப் புருஷனை விட்டுப் பிரிந்திருந்தாள். இக்காலத்தில் நாகி தன்னையும் தன பிள்ளைகளையும் தாபரிக்க வழியற்றுப் புருஷன்மீது ஒரு தாபரிப்பு வழக்கைத் தொடர்ந்தாள். அவ்வழக்கிற் புருஷன் மாதமொன்றுக்கு ரூபா 11 கொடுக்கும்படியுந் தீர்ப்பளிக்கப்பட்டது. இந்தத் தாபரிப்புப் பணத்தைச் சென்ற மூன்று மாசங்களாக அவன் கட்டாததால் அவனுக்கு மூன்றுகிழமை மறியற்றண்டனை விதிக்கப்பட்டது. அவன் மறியலுக்குச் சென்றதும் அவனுடைய தகப்பன் சின்னத்தம்பியும் சகோதரிகள் சின்னனும் சின்னக்குட்டியுமாக நாகியை வைதனர். பின்னர்ச் சின்னக்குட்டி நாகியின் கையில் பிடிக்கச் சின்னவன் ஓர் ஆமாரால் அவளுடைய தலையிலடித்தான். நாகியின் பிள்ளைகள் இதனைக் கண்டதும், சத்தமிட்டனர். இதற்கிடையில் நாகியின் புருஷனின் தம்பியார் மாணிக்கன் அவ்விடம்வந்து நாகிக்கு உதவியாக விருந்த வள்ளிக்குக் கத்தியாற் குத்தினான். சின்னவன் சின்னக்குட்டி மாணிக்கன் சின்னத்தம்பியாகியவர்கள் அவ்விடத்தைவிட்டு ஓடிவிட்டனர். இச்சம்பவம் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டுப் பொலிசார் சென்று காயக்காரர்களை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றனர். என்று தெரிகிறது. விசாரணை நடைபெறுகிறது.

ஒ. கி.

மட்டக்களப்பில் தமிழ்த்தொண்டு

ஸ்ரீ இராமகிருஷ்ண சங்கத்தாரால் மட்டக்களப்பில் விஜயதசமியன்று ஆரம்பிக்கப்பட்ட பாலபண்டித வகுப்பானது முறையாக நடத்தப்பட்டு வருகிறது. 30ஆசிரியர்கள் சமுகங்கொடுத்துக் கலைபயின்று வருகிறார்கள்.

இம்மதி 2-ந் திகதி கல்லடி உப்போடை ஸ்ரீ சிவானந்த வித்தியாலய மண்டபத்தில் பிரவேச பண்டித வகுப்பும் ஆரம்பிக்கப்பட்டு ஒவ்வோர் சனிவாரமும் நடைபெற்று வருகிறது. திரு. V. V. S. கனகசூரியம் பண்டிதரவர்கள் ஆசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார்கள். 15 மாணவர்கள் வகுப்புக்குச் சமுகங்கொடுக்கின்றனர்.

இதனால் மட்டக்களப்பு மாந்தரிடையே "சொல்லில் இனியதமிழ்ச் சொல்லே அதைத்தொழுது படித்திடடி பாப்பா" என்று பாடிவைத்துச் சென்ற பாரதியார்மொழி புத்துணர்ச்சியை அளித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

கடி.த.

அடுத்தவருடம் ரூ. 76 லக்ஷம் செலவு

கொழும்பு நகரசபையின் திட்டம்

இப்போதைய உலக நிலைமையின் காரணமாகக் கொழும்பு நகரசபையின் வருமானம் குறைந்து கொண்டு வருகிறது. அப்படியிருந்தும் நகரசபை அதற்கேற்றவாறு செலவினத்தைச் சுருக்கிக் கொள்ளாமல் 1941ம் வருடத்திய வரவு செலவுத் திட்டத்தில் நிகழும் வருடத்தை விட ஏறக்குறைய 6 லக்ஷம் ரூபாய் அதிகமாகச் செலவிட உத்தேசித்திருக்கிறது.

நகர சீர்திருத்தங்களுக்கும் அடுத்த வருடத்தில் நடைபெறவிருக்கும் ஏனைய வேலைகளுக்கும் ஏழரை லக்ஷம் ரூபாய் செலவிடச் சபை உத்தேசித்திருக்கிறது. இதில் ஏறக்குறைய இரண்டு லக்ஷம் ரூபாய் பொரளைப்பகுதியிலுள்ள மருதானை றோட்டை விஸ்தரிப்பதற்குச் செலவிடப்படுகிறது.

1941ம் வருடத்திற்கு ரூபா 60,83,037 வருமானம் மதிப்பிடப்பட்டிருக்கிறது. நிகழும் வருட இறுதியிற் செலவு போக அதிக வருமானம்ரூ. 8,50,000 கிடைக்குமென்று உத்தேசிக்கக் பட்டிருக்கிறது. விசேஷ வேலைகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகைகளில் ரூ 6,87,485 இவ்வருட இறுதியில் மீதப்படும் ஆகவே, இத்தொகைகளோடு மொத்தம் ரூ 76,20,522 அடுத்த வருடத்தில் வருமானங் கிடைக்கும்.

அடுத்த வருடத்திற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கும் செலவினம் ரூ. 76,02,926. ஆகவே, 1941ம் வருட இறுதியிற் செலவுபோக, அதிக வருமானம் ரூ. 17,560 கிடைக்குமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

கும்பனித்தெருவில் ரூ. 13,000 செலவில் ஒரு பிரசவ விடுதி நிறுவவும் கிழபஜார் பிராந்தியத்தில் ரூபா 66,000 செலவில் ஒரு விளையாட்டு மைதானம் ஏற்படுத்தவும் திம்பிரிகஸ்யாவில் ரூ. 20,000 செலவில் மார்க்கெட்டுக்கு நிலம் வாங்கவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

சென்னைச் சித்தாந்த சமாஜத் தேர்தல்கள்

மேற்படி சமாஜத்தாரால் வருடந்தோறும் நடத்தப்படும் 'இளஞ் சைவப் புலவர்' 'சைவப்புலவர்' என்னும் வகுப்புகட்குரிய தேர்தல்கள் இந்த நவம்பர் மாதம் 24 திகதி ஞாயிற்றுக்கிழமை காலை தொடக்கம் நடைபெறும். இலங்கையிலுள்ள மாணவர்பொருட்டு இத்தேர்தல்கள வழக்கம்போல் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபத்தில் இப்பத்திராசிரியர், திரு. S. அண்ணாமலைப் பிள்ளை யென்னும் இருவரின் மேற்பார்வையில் நடைபெறும். இப்பரீட்சைகளிற் பிரவேசித்தற்காகிய மாணவர்கள் யாருமுளரேல், அவர்கள் பரீட்சைக்கு இருதினங்கட்கு முந்திய, தாங்கள் பரீட்சையிற் பிரவேசிப்பதென்பதை இப்பத்திரிகையின் ஆசிரியருக்குத் தெரிவித்தால், அவர்களுக்கு ஆகவேண்டிய வசதிகளெல்லாம் அமைக்கப்படும்.

பண்டித மாளவியாவுக்கு காந்திஜீ பதில்

காசி நவ 9—

உபவாசத்தை மேற்கொள்ள வேண்டாமெனப் பண்டித மாளவியா மகாத்மாவுக்கு அனுப்பிய தந்திக்கு மகாத்மா பின்வருமாறு பதிலனுப்பியிருக்கிறார்:—

என் விஷயத்தில் தங்களுக்குள்ள அன்பை நான் நன்கறிவேன். தங்களுக்கு இப்போது ஏற்பட்டுள்ள கவலை இன்னதென்று தெரிகிறது. கடவுள் சித்தப்படிதான் காரியம் நடக்கும். முடிவுமாதலால் நான் உபவாச யோசனையை நிறுத்திவிடுகிறேன்.

சாகும்வரை உண்ணாவிரதம்

முஸ்லிம் ஸ்திரீயின் உறுதி

ஹிந்து அராஜகத்தை ஒழிக்க ஏற்பாடு

காரய்ச்சி நவ 9—

சிந்துப்பிரதேசத்தில் இப்போது வியாபாரிகள் பலர் கொலைசெய்யப்படுவதைத் தடுக்கச் சாகும்வரை உண்ணாவிரத மிருக்கும் உறுதியோடு சேவாக்கிராமத்திலுள்ள காந்தி ஆஸ்ரமத்திலிருந்து 40 வயதுள்ள முஸ்லிம் ஸ்திரீ ஒருவர் காரய்ச்சி வந்திருக்கிறார்.

உலகம் பலவிதம்

தான் கள்வன் பிறரை நம்பான்

திருட்டுத் தலைவனாகிய அம்மையன் ஒருநாள் அதிகாலையில், தன் பெண்டாட்டியைக் கொண்டு சாணத்தை யெடுத்துப் பிசைவித்து வாழையிலையில் கட்டுச்சாதம்போற் கட்டுவித்து அப்பொதியையும் எடுத்துக்கொண்டு வெளியே புறப்பட்டான். கரியன் என்னும் இன்னொரு கள்வன் கொஞ்சச் சிறு கற்களைச் சேர்த்து அரிசிப் பொதி போலக் கட்டி அப்பொதியையும் எடுத்துக்கொண்டு எதிர்த்திசையாகப் புறப்பட்டான். முந்திப் புறப்பட்டு வந்த அம்மையன் மத்தியான மாதலும் மார்க்கத்திலுள்ள ஒரு மரத்தின் கீழ் வெயிலுக்கு ஒதுங்கியிருந்தான்; எதிர்த்திசை மார்க்கமாக வந்த கரியனும் அந்த மரத்தண்டை வந்து இருந்தான். அம்மையன் கரியனைப் பார்த்து "எங்கிருந்து வருகிறாய்? உது என்ன பொதி? இனி, எங்கே போகிறாய்" என்று கேட்க, கரியன் தான் இருக்குமிடத்தையும் போகுமிடத்தையுஞ் சொல்லிவிட்டு, "இது அரிசிப் பொதி, வசதியான இடத்திற் சமைத்து உண்ணவே மென்று நினைத்துக்கொண்டு வந்தேன்" என்றான்; பின்னர்க் கரியன் அம்மையனைப் பார்த்து "நீ எங்கே போகிறாய், உது என்ன பொதி" என்று கேட்க அம்மையன் தான் போக விருக்கும் இடத்தைச் சொல்லி "இது கட்டுச்சாதம்; வீட்டிலிருந்து கொண்டுவந்தேன். எனக்கு இப்பொழுது பசிக்கவில்லை; பசி வந்தபின் உண்பேன்" என்றான். அதைக் கேட்ட கரியன் "அண்ணே, எனக்குப் பசியதிகமாக விருக்கிறது; உந்தக் கட்டுச் சாதத்தை எனக்குத்தா, நான் இப்பொழுதே உண்பேன், பசியில்லாத உனக்கு நான் இந்த அரிசிப் பொதியைத் தருகிறேன்; நீ பசி கண்டவுடன் சமைத்து உண்ணலாமே" என்று கேட்டான். அம்மையனும் அதற்கிசைந்து தான் கொண்டுவந்த கட்டுச்சாதத்தைக் கரியனிடங் கொடுக்கக் கரியன் தன் அரிசிப் பொதியை அம்மையனிடம் கொடுத்து "அண்ணே, இந்த இடத்திலே தண்ணீரில்லை; ஆனதால் போகும் மார்க்கத்தில் தண்ணீர் வசதியான இடம் பார்த்து அங்கிருந்து இதனை உண்பேன்' என்று சொல்ல, "தம்பி, அப்படியேசெய்" என்று அம்மையனுங்கூற, கரியன் அவனிடம் விடைபெற்றுக்கொண்டு சரேலென அவ்விடத்தை விட்டு விரைந்து நடந்து அப்பாற் போனான். அம்மையனும் தான் அந்த இடத்தில் இருப்பது புத்தியல்லவென நினைத்துத் தான் போக வேண்டிய மார்க்கமாகப்போனான்.

ஐயோ ஏமாற்றி விட்டானே!

கட்டுச் சாதத்தை வாங்கிக் கொண்டு ஓட்டமும் நடையுமாகப் போன கரியன் சில மைல் தூரம் போனபின் மார்க்கத்தில் குளத்தைக் கண்டு அக்குளத்திலிறங்கிக் கால் கை அலம்பிக் கொண்டு போசனஞ் செய்தற்காகக் கரையில் வசதியாக விருந்து கட்டுச் சாதத்தை உண்ணும்படி பொதியை அவிழ்த்து இலையை விரித்துப் பார்த்தான். பசுமையான சாணம் பிசைந்து வைத்திருப்பதைக் கண்டான கரியன் மனத்தில் ஆத்திரம் வெட்கம் அதிசயம் என்னும் மூன்றும் ஏககாலத்திலேயே நிகழ்ந்தன. "என்ன வித்தை! திருட்டுத் தொழிலிற் கைவந்த என்னைச் சற்று முன்பு இடைவழியிற் சந்தித்த ஒரு வழிப்போக்கனா ஏமாற்றுவது! என்கெட்டித்தனம் என்னாயிருக்கிறது" என்று சொல்லி அந்தச் சாணப் பொதியையும் பழையபடி கட்டிக் கையிற் கொண்டு, வந்தவழியே நோக்கி மீண்டும் வேகமாகப் போனான். இங்ஙனமாக அரிசிப் பொதியை வாங்கிக் கொண்டு எதிர்மார்க்கமாகப் போன அம்மையன் போகும் வழியில் ஒரு மடமிருப்பக் கண்டு அந்த மடத்திலே தான் கொண்டுவந்த அரிசியைச் சோறாக்கியேனும், இல்லையேல் அம்மடத்திலுள்ளவர்களிடத்திற்கொடுத்து ஆக்குவித்தேனும் போசனஞ் செய்யலாமெனநினைந்து மடத்திற் போயிருந்து கொண்டு அரிசிப்பொதியையவிழ்த்துப் பார்த்தான். அரிசிக்குப் பதிலாகச் சிறிய பருக்கைக்கற்களே காணப்பட்டன. கண்டவுடனே அம்மையன் சிரித்தான்; "என்ன! கள்வர்களுக் கெல்லாந் தலைவனென்றிருக்கும் என்னை ஏமாற்றிய அந்த வழிப்போக்கன் என்னைக் காட்டிலுந் திறமான கள்வனாகவல்லவா இருக்க வேண்டும்; இவனை இப்பொழுதே நான் தேடிப் பிடிக்க வேண்டும்" என்று நிச்சயித்து அந்தப் பொதியையும் பழையபடி கட்டிக் கொண்டு அவனைச் சந்திக்கும்படி வந்த வழிக்கே மீண்டு சீக்கிரமாகச் சென்றான். சற்று நேரஞ் செல்ல இருவரும் மார்க்கத்திலே பரஸ்பரஞ் சந்தித்தார்கள்; கண்டவுடனே சிரித்துக் கொண்டு வந்த அம்மையனைப் பார்த்தவுடன், ஆத்திரத்தோடு வந்த கரியனுஞ் சிரித்தான். "கூட்டாளி! நீயே மகாசமர்த்தயன, நான் திருட்டுத் தொழிலில் எனக்கு ஒப்பானவர்கள் எவருமில்லையென்று இறுமாந்திருந்தேன்;

அப்படிப்பட்ட என்னை நீ ஏமாற்றி விட்டாய்; நீ யார்? உன் வரலாறென்ன? எல்லாவற்றையும் விபரமாய்ச் சொல்லு" என்று அம்மையன் கேட்கக் கரியன் தன் வரலாறு முழுவதையுஞ் சொல்லித் தான் ஊரிலே திரும்பும்படியாகவே புறப்பட்டுப்போவதாகவுங்கூறினான். அதைக் கேட்ட அம்மையன் அவனைப் பார்த்து "தம்பி, நாங்கள் இருவரும் தனித் தனிய திருட்டுத் தொழில் செய்வதைக் காட்டிலும் ஒருங்கு சேர்ந்து திருடத் தலைப்பட்டால் பெருங் களவுகளையும் செய்ய முடியும்; அதிகாரிகளும் எங்களை அகப்படுத்துதல் முடியாது, அப்படிக் கூட்டுத் தொழில் பார்க்க உனக்குச் சம்மதமா" என்று கேட்கக் கரியன் அதற்கு "ஓம்" என்றான். இருவரும் கூடிக் கொண்டு புறப்பட்டு இராக் காலமாதலும் ஒரு பட்டினத்தை யடைந்தார்கள்.

புதியனாய் வந்தவனை நம்ப வொண்ணாது

கள்ளிர வாதலும், அம்மையன் முந்தியே தான் அவதானித்து வைத்திருந்த ஒரு செல்வன் வீட்டிலே திருடுதற்குக் கரியனையும் கூட்டிக் கொண்டு போனான். இருவரும் அந்த வீட்டை யடைந்து முகட்டில் ஏறி ஓட்டைப் பிரித்தனர்; அம்மையன் ஒரு கயிற்றை மேலே நின்றபடி அறையுள் தொங்க விட்டுப் பிடித்துக்கொண்டு கரியனைக் கயிற்றின் வழியால் இறங்கச் சொல்ல அவன் அப்படியே செய்தான்; உள்ளே இறங்கிய கரியன் அங்குச் சேமித்து வைக்கப்பட்ட புடவைகள் ஆபரணங்கள் பணம் விலையுயர்ந்த பாத்திரங்கள் முதலிய எல்லாவற்றையும் ஒரு பொதியாகக்கட்டி அங்குத் தானே இருந்த பெரிய பெட்டியுள் வைத்து அப்பெட்டியைக் கயிற்றில் மாட்டினான்; மாட்டும்போது கரியன் மனத்தில் ஒரு சந்தேகம் எழுந்தது. "இந்தப் பெட்டியை நான் கயிற்றில் மாட்டிவிட்டு என் அண்ணனை இழுக்கச் சொல்ல, அவன் இழுத்து வெளியே எடுத்து, என்னை இங்கேதானே விட்டுவிட்டுப் பெட்டியுடன் பொருளைக் கொண்டு போய்விட்டாற் பின் என கதி என்னவாய் முடியும்! புதியனாய் வந்தவனை நம்பவொண்ணாது" என்று யோசித்து ஏதோ உபாயஞ் செய்து கொண்டு முகட்டில் நின்ற அம்மையனுக்குப் பெட்டியை இழுக்கச் சொல்லிச் சைகை தெரிவித்தான். உடனே அம்மையன் அதிக கஷ்டத்தோடு பெட்டியை இழுத்து மேலே எடுத்தான். எடுத்தவுடனே அம்மையன் உள்ளத்தில் ஒரு உபாயம் உதித்தது. "இவனை நான் வெளியேற்றினால், இந்தப் பொருளிற் பாதி இவனுக்குப் பகிர்ந்து கொடுக்க வேண்டி வரும்; ஆனதால் இவனை அறையுட்டானே விட்டு இப்பொருளையும் கொண்டு நான் ஓட்டம் பிடிப்பதே புத்தியாகும்; வேறு கவலை வேண்டாம்" என்றுசொல்லி அம்மையன் பெட்டியோடு கஷ்டப்பட்டு முகட்டினின்றும் இறங்கி ஓட்டம் பிடித்தான். அவன் பல மைல்தூரம் வேகமாகச் சென்று ஒரு அடர்ந்த காட்டினுள்ளே புகுந்து பெட்டியைக் கீழே வைத்துவிட்டு ஆறுதலாக அதனைத் திறந்தான். திறந்தவுடனே கரியன் துள்ளிக் கொண்டு வெளியே குதித்து "அண்ணே! உனக்குக் கோடி நமஸ்காரம்; நான் நடந்து சிரமப்படாமல் என்னை இவ்வளவு தூரத்திற்குஞ் சுமந்து கொண்டு வந்தாயே! இப்படி நீயல்லாமல் வேறு யார் செய்வார்கள்" என்று சிரித்துக் கொண்டு சொன்னான். அம்மையன் தலை குனிந்தபடி வெட்கத்துடன் ஒன்றும் பேசாது நின்றான். பின்னரும் கரியன் அம்மையனைப் பார்த்து "அண்ணே, நாங்கள் ஒருவர் மேலொருவர் சந்தேகப்பட்டால் முதலில்லா வியாபாரமாகிய இந்தத் தொழிலைச் செய்தல் முடியாது. ஆனதால் நாங்கள் ஒருவர்க்கொருவர் துரோகம் நினைப்பதில்லையென்று சத்தியஞ் செய்து கொள்ள வேண்டும்" என்றான். அம்மையனும் உடன்பட்டு அப்படியே சத்தியஞ் செய்தபின் கரியனைப் பார்த்து "தம்பி, திருடிய பொருளைக் காணேனே; உன்னைத்தானே பெட்டியுட் கண்டேன்; பொருளெங்கே" என்று கேட்க, கரியன் "அண்ணே, பொருள் முழுவதையும் ஒரு பொதியாகக் கட்டி முதல் இந்தப் பெட்டிக்குள் வைத்தேன்; பின்பு உன்மேற் சந்தேகம் பிறந்தமையில், அந்தப்பொதியைவெளியே யெடுத்து வைத்து விட்டு நான் பெட்டியுட் புகுந்து கொண்டு உனக்குச் சைகை செய்து விட்டுக் கயிற்றின் உருவுதடத்தை ஒருவாறு இறுகச் செய்து விட்டேன்; திருடிய பொருள் உடையவர் வீட்டிலேயே இருக்கிறது" என்றான். அம்மையன் தான் செய்ய நினைத்த வஞ்சனையையிட்டுக் கவலைப்பட்டான். அன்று தொடக்கம் இத்திருடரிருவரும் ஒற்றுமையாகத் தம் தொழிலைச் செய்தார்களாம்.

கத்திக்குத்து வழக்கில் நீதிபதி தீர்ப்பு

12-11-40

கத்திக்காயமுண்டாக்கிய குற்றவாளிகளுக்கு மறியற்றண்டனை விதிக்காமல் விடுவது எனது வழக்கமில்லை. ஆனால் அப்படி விடுஞ் சில வழக்குகளில் இதுவுமொன்று. ஏனெனில், காயக்காரன் பக்கத்திற்காக அவ்வூர் விதானையார் சாக்ஷியங் கூறுகையில், காயக்காரன் எதிரியின் குடும்ப விஷயங்களில் இடைபட்டிருக்க முடியுமென்ற கருத்தமையக் கூறியமையாலும் எதிரி கூட்டிலேறித் தனது மகள் இப்போது கர்ப்பவதியாயிருக்கிறாளென்று ஒரு லோபமுமில்லாமற் கூறியிருக்கமாட்டானென்றும், காயக்காரனின் மனைவிக்கும் எதிரிக்கு மேதோ சம்பந்தமுண்டென்ற காரணம் வழக்கிற் காட்டப்பட்டிருக்கிறதென்றும் கூறி மேலும் என்ன எப்படி நடைபெற்ற போதிலும், எதிரியின் மனைவியும் பிள்ளையும் எதிரியை விட்டுப் பிரிந்திருப்பது அப்பிள்ளைக்கு நல்லதல்லவென்றும் மேற்கூறிய நியாயங்களால் எதிரிக்கு அந்த நேரத்தில் ஆத்திரமிருந்திருக்க முடியுமாகையால் இப்படிக் காயம் வருவித்திருக்கக்கூடும். இருந்தாலும் இப்படியாகக் கண்டபடிக்குக் கட்டளைச் சட்டத்திற்கு மாறாகக் கத்தியை எடுத்து உபயோகித்திருக்கக் கூடாது" என யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிபதி திரு. E. V. R. சமரவிக்கிரம சிவன் கோவிலடியில் வசிக்கும் நாகப்பா-பொன்னம்பலம் நல்லூரில் வசிக்கும் சுந்தரம்-சுப்பிரமணியமென்பவருக்குக் கத்தியாற் குத்திக் காயமுண்டாக்கியதாகக் குற்றஞ் சாட்டிய வழக்கில் தீர்ப்புக் கூறுகையில் கூறி எதிரிக்கு ரூபா 50 அபராதமும் 100 ரூபாவில்ஆறு மாத நன்னடத்தையும் விதித்தார். அபராதப் பணம் கட்டத் தவறினால் இரண்டு மாதச் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டியதென்றுங் கூறப்பட்டது.

ந-சி

இருபாலை விரகத்திப் பிள்ளையார் கோயில்

நித்தியபூசை யாரம்பம்

சென்ற மூன்று நான்கு வருடங்களாகப் பூசை முதலியன வின்றியிருந்த இவ்வாலயத்தில் சென்ற திங்கட்கிழமை யன்று மேற்படி கோவில் சொந்தக்காரர் பிராயச்சித்தாபிஷேகம் நடத்தி நித்திய பூசையையும் ஆரம்பித்திருக்கிறார்களெனத் தெரிகிறது. இவ்வாலய நிருவாகஸ்தர்கள் செயல் பாராட்டத் தக்கதாகும்.

ஸ்ரீ காசி ஹிந்து சர்வகலாசாலை

புரோ வைஸ்சான்ஸலர் பதவி

ஸ்ரீகாசி, நவ 9

பண்டித மதனமோகன மாளவியா, ஸ்ரீகாசி ஹிந்துசர்வகலாசாலைவைஸ்சான்ஸலரான ஸர் ராதாகிருஷ்ணன் ஆகியோரின் வேண்டுகோளுக்கிணங்க 6 வருஷம் அலகாபாத சர்வகலாசாலையில் வைஸ்சான்ஸலராகவிருந்த பண்டித இக்பல் நாராயண குர்த்து ஸ்ரீகாசி ஹிந்து சர்வகலாசாலையின் புரோவைஸ்சான்ஸலர் பதவியை ஏற்றுக்கொள்ள ஒப்புக் கொண்டுவிட்டார்.

'ஹரிசன்' நிறுத்தம்

விடைபெற்றுக் கொள்ளுகிறேன்

மகாத்மா கூறும் காரணம்

பம்பாய், நவ 10— 'ஹரிசன்' பத்திரிகையில் மகாத்மா 'வாசகர்களுக்கு' என்று தலைப்பிட்டு எழுதியுள்ள ஒரு வியாசத்தின் விபரமாவது:—

நான் பத்திரிகையில் வெளியிட்டிருந்த அறிக்கையிலிருந்து 'ஹரிசன்' பத்திரிகையும் மற்றிரண்டு வார சஞ்சிகைகளும் நிறுத்தப்பட்டிருப்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். ஒருவாரம்தான் நிறுத்திவைக்க நேரும் என நான் நம்பியிருந்தேன். ஆனால் அந்த நம்பிக்கை நிறைவேறாது எனத் தெரிகிறது. வாரந்தோறும் உங்களுக்கு அப்பத்திரிகைகள் மூலம் நான் சில விஷயங்களைச் சொல்வது இனி நடக்காது. நீங்களும் வாரா வாரம் எனது வியாசத்தையும் பார்க்க முடியாது. என் மனதில் பட்டதை நான் வெளிப்படையாக அப்பத்திரிகைகளில் சொல்லி வந்தேன். இப்போதுள்ள நிலையில் அவ்வித பேச்சுக்கு இடமில்லை; சட்டமறுப்பு ஆரம்பிக்க எனக்கு உத்தேசமில்லாமையால் நான் அப்பத்திரிகைகளில் என் விருப்பப்படி எழுத முடியாது. குறிப்பிட்ட சில விஷயங்களை மட்டுமே தான் நான் எழுத வேண்டுமென்றால் அது தலையிலாத முண்டத்தைக் கட்டிக் கொண்டு அழுவது போலாகும். நிர்மாணத் திட்டம் என்பது மற்றொன்றை வெளியிடுவதாகும். அதுவுமில்லாமல் பத்திரிகை எழுதத் தவறினால் அது என் கடமையினின்றும் தவறியதாகும். இப்போது பிறப்பிக்கப்பட்டுள்ள அவசரச் சட்டத்துக்கு நான் இணங்கியதாகவும், அதற்கு அர்த்தம் கொடுக்கப்படும். இந்தத் தடை உத்தரவு நீக்கும் வரை பத்திரிகை வெளியாகாமலிருக்கும்; இதுதான் சத்தியாக்கிரகி அந்தத் தடை உத்தரவை மரியாதையாகக் கண்டிக்கும் ஒரு முறையாகும். இவ்விதம் புரிவது முக்கியமான ஒன்றை ஸ்தாபிப்பதற்குப் போராடி உயிரைக் கொடுப்பதைக் காட்டிலும் அதிக பலத்தைத் தருகிறது. இதை அறியாமல்தான் நான் ஆங்கிலேயரை நாஜிகள் விஷயத்திலும் பணிவாக அஹிம்ஸையை அநுஷ்டிக்கும்படி சொன்னதற்காகப் பலர் என்னைக் குறை கூறினர்கள்.

பிரிட்டனுக்கு யோசனை

ஆயுதங்களைப் போட்டுவிடுங்கள்! தைரியமிருந்தால் நாஜிகள் பிரிட்டனைக் கைப்பற்றட்டும் பார்ப்போம் என்று சொன்னேன். ஆனால் பிரிட்டிஷார் நாஜிகளுக்காகத் தங்கள் ஆவியை விற்றுவிடக் கூடாது. புறம்பேயில்லாவிட்டாலும் உள்ளே அவர்கள் பலத்துடனிருக்க வேண்டும். முக்கியமல்லாத காரியங்களைப் பூரணமாக விட்டுக் கொடுப்பதால், முக்கியமானவற்றைக் காக்க பூரண பலம் நமக்கு ஏற்படும். ஆங்கிலேயரும் எனது கொள்கையை அங்கீகரிக்கும்படிச் செய்வதற்காக நான் இவ்விதம் எழுதவில்லை. தடையுத்தரவு போட்டவர்களுக்கு நான் இணங்கி நடப்பதைக்கண்டு நீங்கள் ஒரு பாடம் கற்றுக் கொள்ள வேண்டுமென்பதற்காகவே நான் இதை எழுதுகிறேன். இந்தப் படிப்பினையை அறிந்து நடந்தால் ஹரிஜன் மூலம் வாராந்த யோசினைகளை நீங்கள் எதிர்பார்க்க வேண்டியதில்லை. ஹரிசனைப் பார்க்காமலே நான் எவ்விதம் நடக்கப் போகிறேன் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

'ஹரிசன்' அளித்த உணவு

ஒரு நிருபர் நான் ஹரிசனை எக்காரணம் கொண்டும் நிறுத்தக் கூடாதென்றும், அவர் வாரந்தோறும் ஹரிசன் மூலம் கிடைத்த உணவைக் கொண்டு தமது அஹிம்ஸையை வளர்த்துவந்ததாகவும் எனக்கு எழுதியிருக்கிறார். அவ்விதம் அவர் செய்து வந்தது உண்மையாயின் இவ்விதம் நாமே ஏற்படுத்திக் கொண்ட இந்தக் கட்டுப்பாட்டால் அவர் அதிகமான ஆதரவு பெற வேண்டும். இது சிறந்த சந்தாதாரர்களுக்கு ஒரு வார்த்தை. ஹரிசன் பத்திரிகை எப்போது மீண்டும் பிரசுரிக்கப்படுமோ தெரியாது. இவ்விதம் நிறுத்தி விட்டதால், கட்டிய சந்தாப் பணத்தில் ஒரு பகுதியைத் திருப்பிப் பெற சந்தாதாரர்களுக்கு உரிமை உண்டு. பணத்தைத் திருப்பிப் பெற விரும்புபவர்கள் பூனாவிலுள்ள 'ஹரிசன்' ஆபீஸ் மானேஜருக்கு ஒரு கார்டு எழுதினால் போதும். உடனே பணம் திருப்பி அனுப்பப்படும். மிகுந்த பணத்தைத் திருப்பி அனுப்பும்படி கேட்காவிட்டால் மீண்டும் பத்திரிகையைப் பிரசுரிக்க ஆரம்பித்ததும் அதை அவர்களுக்கு அனுப்பி வருவார்கள், இல்லையானால் அதனால் ஏற்பட்ட நஷ்டத்துக்கு அப்பணத்தை ஈடுசெய்து விடுவார்கள். அதற்கும் கண்டு மிஞ்சுமானால் ஹரிஜனங்களின் சேவைக்காக ஹரிஜன சேவாசங்கத்துக்கு அப்பணம் அளிக்கப்படும். ஆறு மாதத்துக்குள் மீண்டும் ஹரிசன் பிரசுரிக்கப்படாவிட்டால், அப்பத்திரிகை அடியோடு நிறுத்தப் பட்டுப் போய்விட்டதாகவே கருத வேண்டும். இதற்கிடையில் வாசகர்களிடமிருந்து ஹரிசன் விடைபெற்றுக் கொள்ளுகிறது.

மாத்ருபூமியில் தலையங்கமில்லை

நாகபுரி நவ 9

பத்திரிகைகளுக்கு விதித்துள்ள நிர்ப்பந்தங்களைக் கண்டிக்க அகோலாவில் மராத்தியில் வெளியாகும் மாத்ருபூமி என்ற வாரப் பத்திரிகையில் தலையங்கம் எழுதுவதில்லையென முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

லோகசக்திக்கு ஜாமீன் நோட்டீஸ்

பம்பாய் நவ 9

பூனாவிலுள்ள லோகசக்தி பத்திரிகையில் ஆக்ஷேபகரமான விஷயங்கள் வெளிவந்ததால் செப்டம்பர் 21-ந் தேதிய பிரசுரம் பறிமுதல் செய்யப்பட்டதோடு அந்தப் பத்திரிகை அச்சிடப்படும் அச்சுக்கூடச் சொந்தக்காரர் 2060 ரூபாய் ஜாமீன் கட்டவேண்டுமென்று நோட்டீஸ் விடப்பட்டிருக்கிறது.

'சத்தியாக்கிரகி' நின்றுவிட்டது

கட்டாக் நவ 7

'ஹரிசன்' பத்திரிகையில் வெளியாகும் விஷயங்களை விசேஷமாகப் பிரசுரித்து வந்த 'சத்தியாக்கிரஹி' என்ற ஒரியா பாஷைப் பத்திரிகை மகாத்மா 'ஹரிசன்' பத்திரிகையை நிறுத்தி விட்டதால் இனி வெளிவராதென அறிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பில் வரி சகாயம்

33,000 ஏக்கர் நிலம் பறிமுதலாகாமல் தப்பியது

மட்டக்களப்பிலுள்ள பட்டிப்பளை ஆற்றுத்திட்டத்தின் கீழ் நெற்பயிர் செய்பவர்கள் 1937-38ம் ஆண்டுகளுக்கு நீர்ப்பாசன வரி செலுத்தத் தவறியதற்காக அரசாங்கத்தார் இவ்வருடம் அவர்களின் நெற்காணியைப் பறிமுதல் செய்யப்படவிருந்தது. ஆயின், விவசாய நிருவாகக் கொமிற்றி மேற்படி வரியை இம்முறை விட்டுவிடத் தீர்மானித்துவிட்டதால் குறித்த பறிமுதல் தவிர்க்கப்பட்டு விட்டது.

மேற்படி வரிகளை உரிய காலத்தில் வசூல் செய்வதற்கு அரசாங்கம் தவறிவிட்டது. அந்த வரியைக் காலந்தாழ்த்தி வசூலிக்க முயற்சித்தபோது பலத்த ஆக்ஷேபனை எழுந்தது.

அரசாங்கசபையின் மட்டக்களப்புப் பிரதிநிதியான திரு. எஸ். தர்மரத்தினம் விவசாய மந்திரிக்கு மேற்படி விஷயமாக எழுதியதாவது:—

1937ம், 38ம் வருடத்திய நீர்ப்பாசன வரிகளை ஜனங்கள் உரிய காலத்திற் சுலபமாகச் செலுத்தியிருக்க முடியும். ஆயின், அந்த வருடங்களில் ஒருவருமே அதை வசூல் செய்யவில்லை. இது அரசாங்கத்தின் தவறாகும், அரசாங்க அதிகாரிகள் அன்று தமது கடமையைச் செய்யத் தவறி விட்டபடியால் இன்று ஜனங்களின் நெற்காணிகளைப் பறிமுதல் செய்ய ஓடியாடித் திரிகின்றனர். அதன் விளைவாக இன்று 33,000 ஏக்கர் நெற்காணி பறிமுதல் செய்யப்படவிருக்கின்றது. இதனால், 32,000 ஏக்கர் நிலம் தரிசு நிலமாவதோடு குறித்த டிஸ்திரிக்கின் விவசாயமும் கெட்டழிந்து போகும். யுத்தத்தின் விளைவாக ஏற்படக்கூடிய உணவுப் பஞ்சத்தைச் சமாளிப்பதற்காக அதிகமான உணவுப் பொருள்களை உற்பத்தி செய்ய உத்தேசித்திருக்கும் இந்தச் சமயத்தில் 33,000 ஏக்கர் விஸ்தீரணமுள்ள திறமான நெற்காணி தரிசு நிலமாக்கப்பட விருக்கிறது.

மாகாணத் தலைவர் திரு. ஆர். ஓய். டேனியல் விவசாய மந்திரியிடம் சமர்ப்பித்த அறிக்கை யொன்றில் 1939ம் வருடத்திய வரட்சியை முன்னிட்டு 1937ம் வருடத்திய நீர்ப்பாசன வரியான 24,088ரூபாய் 25 சதத்தையும் வசூல் செய்யாமல் விட்டுவிடும்படி சிபார்சு செய்திருந்தார்.

இலக்கணமும் இலக்கியமும்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருளு மிதன்பாலுள இதன்பால் இல்லாத எப்பொருளுமில்லை.'' என்பதற்கேற்ப மொழிவளம், பொருள் வளம், ஆல்வளஞ் சிறந்த நந்தன்னிகரற்ற தண்டமிழ்மொழி விளங்குகின்றது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த நந்தமிழ் மொழியை மேலும் மேலும் வளம்பெறச் செய்யும் வழியாது? என்றால் வளரும் என்ன ஆயுங்கால் தற்கால உலக மொழியாகப் பரவியுள்ள ஆங்கில மொழியின் அறிவியல் நூல்களைத் தமிழில் மொழிபெயர்க்க வேண்டும். மொழிபெயர்க்குமுன் அக் கலைச்சொற்களுக்கேற்ற தூய தமிழ்ச் சொற்களை இருமொழியிலும் புலமை வாய்ந்த சான்றோர்கள் ஆக்கிக் கொடுத்து உதவல் வேண்டும். பொய்யும் புளுகும் புனைந்து கட்டிய புராணக் கதைகளுக்கு ஆக்கந் தேடாது இவ்வழியில் ஆராய்ச்சி செய்தல் வேண்டும். சொற்செட்டு, உயிர்ப்புச்செட்டு இல்லை தமிழ் மொழிக்கென வாய்ப்பறை சாற்றிப் பிறமொழி மயக்கில் கட்டுண்டு கிடக்கும் போலித் தமிழ் மக்கட்கு உணர்ச்சி யுண்டாகுமாறு தெளிவாக உரைநடை எழுதல் வேண்டும். பிறமொழிகளிலுள்ள சொற்களை அப்படியே யெடுத்துத் தமிழின் வளர்ச்சிக்குத் தடையாக உரை நடைகளில் எழுதாது தூய தமிழ்ச் சொற்களையே ஆய்ந்து எழுதல் வேண்டும். பழந்தமிழ் நூல்களில் உரையில்லாதவைகட்கு உரையெழுதுதல் வேண்டும். உரையெழுதுங்கால் அவ்வவர்கள் கொள்கைக்கேற்றவாறும், ஆராய்ச்சிப் போக்குக்கு ஏற்றவாறும் மூலபாடத்தைச் சிதைத்துப் பாடவேறுபாடாக்காது உள்ளதை உள்ளவாறே வைத்து அதற்குப் பொருள் கண்டெழுதல் வேண்டும். இன்னும் இவைபோன்ற மற்றைய ஆக்க வேலைகளைக் கண்காணிப்போடு செய்துவந்தால் தமிழ் மொழி தன் சிறந்து விளங்கும் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. தமிழ்ப் பெரியோர்களே! இத்தொண்டு செய்தற்கு எழுமின்! எழுமின்!

இச்செய்தி பற்றியே நம் பாரதியார் சொல்வதைக் கேண்மின், காண்மின்!

"புத்தம் புதிய கலைகள்-பஞ்ச
பூதச்செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே-அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை
சொல்லவுங்கூடுவதில்லை-அவை
சொல்லுந் திறமை தமிழ்மொழிக்கில்லை
மெல்லத்தமிழினிச்சாகும்-அந்த
மேற்குமொழிகள் புவிமிசையோங்கும்
என்றந்தப் பேதையுரைத்தான்-ஆ!
இந்தவசையெனக் கெய்திடலாமோ
சென்றிடுவீரெட்டுத்திக்கும்-கலைச்
செல்வங்கள் யாவுங்கொணர்ந்திங்கு சேர்ப்பீர்,
தந்தையருள் வலியாலும்-இன்று
சார்ந்தபுலவர் தவவலியாலும்
இந்தப்பெரும்பழிதீரும்-புகழ்
ஏறிப்புவிமிசையென்றுமிருப்பேன்'

எனத் தமிழ்த் தாய் வாயிலாகப் பாரதியார் எவ்வளவு கருத்துக்களை வெளியிட்டுக் காட்டுகின்றார்! அவரின் தமிழ்ப் பற்று மலையினும் மாணப் பெரிதாகவன்றோ வளர்ந்திருக்கின்றது! நமக்கும் அப்பற்றுதல் வேண்டாமா? பற்றுக்கொண்டு ஆவன செய்வதற்கு வம்மின்! விரைந்துவல்லே, இத்தொண்டிற்கு

"நிதிமிகுந்தவர்பொற்குவைதாரீர்,
நிதிகுறைந்தவர்காசுகள்தாரீர்
அதுவுமற்றவர்வாய்ச்சொல்அருளீர்
ஆண்மையாளருழைப்பினைநல்கீர்.''

என உங்களை மன்றாடிக் கேட்டுக் கொள்கின்றேன்.

பொருள் படைத்த பெரியோர்களே, நீவிர் களியாட்டங்கட்கும், மஞ்சு விரட்டு, கரகம் எடுப்பு, பேயாட்டு முதலியவைகட்கும் பெரும் பொருள்களைக் கொட்டி வீணாக்குகின்றீர்கள். அந்த வழியைக் கட்டுப் படுத்தி ஆங்காங்கே கலைச் செல்வம் ஓங்குதற்குச் சங்கங்கள், பள்ளிகள், வாசிகசாலைகள் திறவுங்கள்.

"பந்தினையிளையவர்பயிலிடமயிலூர்,
கந்தனையனையவர்கலைதெரிகழகம்
சந்தனவனமலசண்பகவனமாம்
நந்தனவனமலநறைவிரிபுறவம்''

எனக் கல்வியிற் பெரிய கம்பன் கண்ட கண்ட இடங்களிலும், விளையாட்டிடங்களிலும் பள்ளிகளும், வாசக சாலைகளுமே பல்கியிருந்தன அயோத்தியில் எனக் காட்டும் கலை வளரும் கனவை உண்மையாக்கிக் காட்டுங்கள்! நாடு செழிக்க, வளம் வளரத் தமிழ் வளர்கேடு ஒழியக் கிளர்ச்சிகள் செய்ய வேண்டுகிறேன்.

காங்கிரஸ் தலைவரின் கராச்சி விஜயம்

புதிய டில்லி, நவ 10— காங்கிரஸ் தலைவர் மௌலானா அபுல்கலாம் ஆஸாத் இன்று காலை டில்லி வந்து சேர்ந்தார். அவர் நாளைக்காலை 9-30 மணிக்கு விமானத்திற் கராச்சிக்குப் புறப்படுவார். இன்று நடக்கவிருக்கும் சட்டசபைக் காங்கிரஸ் கட்சிக்கூட்டத்தில் தற்கால ராஜீய நிலைமையைப்பற்றியும் காங்கிரஸ் அங்கத்தினர்களை மத்திய சட்டசபைக் கூட்டத்துக்கு வர அனுமதித்தமைபற்றியும் பிரதானமான பிரசங்கமொன்று செய்வார்.

பத்திரிகை நிர்ப்பந்தம்

வாபிஸ்வாங்கிக் கொள்ளப்படும்

ஹிந்து ஆசிரியரின் அறிக்கை

புதிய டில்லி, நவ 10— "யுத்தத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு நேர்முகமாகவோ அல்லது மறைமுகமாகவோ எதிர்ப்பைக் கிளப்பி விடக்கூடிய செய்திகளைப் பிரசுரிக்கக்கூடாதென்று பாதுகாப்புச் சட்டப்படி அரசாங்கத்தார் இயற்றியுள்ள விதிகள் வாபீஸ் வாங்கிக்கொள்ளப்படும்." என்று இன்று காலை கூடிய பத்திரிகாசிரியர்கள் மகாநாட்டில் தலைமை வகித்த ஸ்ரீமான் கே. சீனிவாசன் (ஹிந்து ஆசிரியர்) எடுத்துச் சொன்னர்.

திருத்திக்கொள்க

28-10-40ல் வெளிவந்த இதழில் பிரசுரிக்கப் பட்டிருந்த யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட் 727 T இலக்கம் கொண்ட விற்பனவு விளம்பரத்தில், காலஞ்சென்ற இன்னாசிமுத்து சவரிமுத்துவின் வளர் தெல்லிப்பழை கிழக்கு என்றிருப்பதை தெல்லிப்பழை மேற்கு எனவும், 1-ம் காணியில் பர. நில. இலா. 12 குளி 14½ என்றிருப்பதை பர. நில. இலா. 8 குளி. 15¼ எனவும் திருத்திக் கொள்க.

K. பொன்னப்பா
வெத்திஸ்மேஸ்தரும்
கொம்மிஷனரும்.

இணுவில்
13-11-40

கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 27116

சிறுவிழான் அருளந்தசுப்பிள்ளை சவரிமுத்து காலஞ்சென்ற மனுவேல்பிள்ளை பெண் ஆளுப்பிள்ளையின் மரணசாதனத் தத்துவகாரன்.

எதிராக

வழக்காளி

சிறுவிழான் 1. சந்தியாப்பிள்ளை அருளந்தசுப்பிள்ளையும் பெண் 2. மரியைப்பிள்ளையும் 2ம் எதிரி தாருகவும் காலஞ்சென்ற ஞானப்புவின் மரணசாதனத் தத்துவகாரியாகவும் எதிரிகள்

சிறுவிழான் 1. அருளந்தசுப்பிள்ளை மனுவேல்பிள்ளை 2. அருளந்தசுப்பிள்ளை கருணையப்பு 3. சூசைப்பிள்ளை பிலிப்பு 2ம் எதிராளியின் பதில் எதிரிகள்

3A. சிறுவிழான் பிலிப்புப்பிள்ளை வயித்தியாம்பிள்ளை

3B. சிறுவிழான் அகஸ்திசுப்பிள்ளை மனுவல்பிள்ளை

3C. சிறுவிழான் அகஸ்திசுப்பிள்ளை கருணையப்பு பதில் எதிரிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் 27116ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் மூன்று துண்டுக் காணிகள் 1940 ஆம் மார்கழிமீ 4ந்உ புதன்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 700ம் இதற்கு 17-11-30ந் திகதி தொடக்கம் 100க்கு 9 வீத வட்டியையும், செலவு ரூபா 350-70

காணிகளின் விபரம்

1. சிறுவிழான் இறை அத்துவாம் புலம் பர. கி. இலா. 3 குளி 15 செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு 2ம் எதிரியும் காலஞ்சென்ற சூசைப்பிள்ளை மகம்பெண் ஞானப்புவும் பங்காளரும் வடக்கு வயித்தியாம்பிள்ளை பெண் வயக்கினேரும் கை ஒழுங்கையும் மேற்கு ஒழுங்கை தெற்கு சந்தியாப்பிள்ளை பெண் மரியைப்பிள்ளை இதில் சொரியலாய் 3பங்கும் வடக்கெல்லைக் காணியில் கிணற்றில் பங்கும் வழிவாய்க்காலும்.

2. ஷை. இறை கொக்கட்டியன் பர. கி. இ. 1 குளி 15 பனைகளும் எல்லைகிழக்கு சந்தாஞசி மாதாகோவிலும் அருளக்காஞ்சிப்பிள்ளை நிக்கிலாப்பிள்ளையும் வடக்கும் மேற்கும் ஒழுங்கை தெற்கு சந்தாஞசி மாதாகோவில் இதில் சொரியலாய் அரைவாசி.

3. பெரியவிழான் இறை வதக்கறை பர. கி. இ. தெல் இ. 8 குளி 12½ வடலிகளும் எல்லை கிழக்கு சண்முகம் வள்ளித்தம்பி வடக்கு அருளந்தசுப்பிள்ளை வயித்தியாம்பிள்ளை மேற்கு சந்தியாப்பிள்ளை பெண் மரியைப்பிள்ளையும் பங்காளரும் தெற்குக் காசிநாதர் ராகமுத்து இது அடங்கலும்.

க. பொன்னப்பா
கொம்மிஷனர்

இணுவில்
9-11-40

Mis. 146 14-11-40

ஆகாய வசனி அறிக்கைகள்

நவம்பர் 15 வெள்ளி

மதராஸ் 1

முதல் ஒலிபரப்பு

காலை: 7-30 ஸ்வாகதம்(இசைத்தட்டு) 7-35 தெலுங்கில் செய்திகள், 7-45 தமிழில் செய்திகள், 7-55 கே. ஆர். கணபதி புல்லாங்குழல், 8-25 திரைகானம் (இசைத்தட்டு) சூர்யகுமாரி, காஞ்சனமாலா, [illegible], விஜயாள், சுப்பையாநாயுடு, 8-50 ஆங்கிலத்தில் செய்திகள், 9-00 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

1-30 ஆங்கிலத்தில் செய்திகள், 1-35 கே. ஆர். கணபதி புல்லாங்குழல், 2-00 பள்ளிக்கூடங்களுக்கு (ஆங்கிலம்) 2-30 இருதாரிசை (இசைத்தட்டு) விச்வேச்வரம்மாவும், மாஸ்டர் கருடும், வசந்தாவும், விச்வேச்வரம்மாவும், 2-45 தமிழில் செய்திகள், 2-50 தெலுங்கில் செய்திகள், 2-55 வாத்தியசங்கீதம், 3-00 ஒலிபரப்பு முடிவு.

மூன்றாவது ஒலிபரப்பு

மாலை: 4-00 ஆரம்பப் பாடசாலைகளுக்கு, 4-30 ஐரோப்பிய சங்கீதம் (இசைத்தட்டு) 5-00 கே. ஸபேசன் வீணை, 5-45 வாத்தியசங்கீதம், 6-00 ஆங்கிலத்தில் செய்திகள், 6-05 எல். சங்கரராவ் பாட்டு, 6-30 பி. கே. பாக்கியலக்ஷ்மி பாட்டு, 7-00 புத்தகவிமர்சனம் (தமிழ்) வேலூர் மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை, 7-10 இடைவேளை (இசைத்தட்டு) 7-20 தெலுங்கில் செய்திகள், 7-35 தமிழில் செய்திகள், 7-50 பக்த துருவா ஒரு இசை நாடகம், 8-30 கே. ஸபேசன் வீணை, 9-00 உலக விவகாரங்கள் 9-15 உள்ளூர் வர்த்தமானமும் அறிவிப்புகளும் (ஆங்கிலம்) 9-20 ஆங்கிலத்தில் செய்திகள், 9-30 லண்டனிலிருந்து செய்திகள், 9-45 கே.பி.பாக்கியலக்ஷ்மி பாட்டு: 10-30 ஒலிபரப்பு முடிவு.

மதராஸ் 2

முதல்,இரண்டாவது ஒலிபரப்புகள் மதராஸ் 1-ல் உள்ளபடி.

மூன்றாவது ஒலிபரப்பு

4-00 மதராஸ் 1-ல் உள்ளபடி, 6-05 கிராமாந்திரநிகழ்ச்சிகள் (தெலுங்கு) 6-30 மதராஸ் 1ல் உள்ளபடி, 6-45 ஒலிபரப்பு முடிவு.

நான்காவது ஒலிபரப்பு

7-00 மதராஸ் 1ல் உள்ளபடி, 9-30 ஐரோப்பியசங்கீதம்(இசைத்தட்டு)10-30 ஒலிபரப்பு முடிவு.

திருச்சி

முதல் ஒலிபரப்பு

காலை: 7-30 தினாரம்பம் 7-45 தமிழில் செய்திகள், 7-50 கவ்வாலிகள் (இசைத்தட்டு) 8-20 எம்.என். ஆறுமுகம்பாட்டு 8-50 ஆங்கிலத்தில் செய்திகள், 9-00 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

1-30 ஆங்கிலத்தில் செய்திகள், 1-35 எம். என். ஆறுமுகம் பாட்டு, 2-00 கல்வி ஒலிபரப்பு 2-30 ஸ்ரீமதி ஜி. சென்னம்மா (இசைத்தட்டு) 2-45 தமிழில் செய்திகள், 2-50 ஹிந்துஸ்தானி பாடம், 3-00 ஒலிபரப்பு முடிவு.

மூன்றாவது ஒலிபரப்பு

மாலை 5-00 வாத்தியசங்கீதம், 5-15 டி. எஸ். ராஜரத்னம், டி. எஸ். வைத்தியநாதன் நாகஸ்வரம், 6-00 ஆங்கிலத்தில் செய்திகள், 6-05 ஸ்ரீமதி எம். எஸ். திருபுராம்பாள் பாட்டு, 6-30 கிராமாந்தர நிகழ்ச்சி, 7-00 உலகவிவகாரங்கள் லண்டனிலிருந்து அஞ்சல், 7-15 கோஷ்டி கானம், அ இ ரே இசைவாணர், 7-30 அறிவிப்புகள், 7-35 தமிழில் செய்திகள், 7-50 திருவாரூர் டி. எஸ். ராஜரத்னம், டி. எஸ். வைத்தியநாதன் நாகஸ்வரம், 8-30 எங்கள்தபால்பெட்டி, 8-40 ஸ்ரீமதி எம்.எஸ். திருபுராம்பாள் பாட்டு, 9-20 ஆங்கிலத்தில் செய்திகள், 9-30 லண்டனிலிருந்து செய்திகள், 10-00 ஒலிபரப்பு முடிவு.

நவம்பர் 16 சனி

மதராஸ் 1

முதல் ஒலிபரப்பு

காலை: 7-30 ஸ்வாகதம்(இசைத்தட்டு) 7-35 தெலுங்கில் செய்திகள், 7-45 தமிழில் செய்திகள், 7-55 திரைகானம் (இசைத்தட்டு) மாஸ்டர் ஸ்ரீதர், ஸ்ரீமதி லலிதா மாஸ்டர் ஸ்ரீதர், ஸ்ரீமதி லலிதா, வஸந்தா, ஸ்ரீனிவாசன், ஸ்ரீனிவாசன் கோஷ்டி, 8-25 குழந்தைகளுக்கு பி. ஆர். ராஜசூடாமணி தயாரித்தது. 8-50 ஆங்கிலத்தில் செய்திகள், 9-00 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

1-30 ஆங்கிலத்தில் செய்திகள், 1-35 ஆசிரியர்களுக்கு (ஆங்கிலம்) 2-00 குழந்தைகளுக்கு (ஆங்கிலம்) 2-30சத்தகுமார் (இசைத்தட்டு) 2-45 தமிழில் செய்திகள், 2-55 வாத்தியசங்கீதம், 3-00 ஒலிபரப்பு முடிவு.

மூன்றாவது ஒலிபரப்பு

மாலை: 4-00 மாதர்களுக்கு(ஆங்கிலம்) 4-30 ஐரோப்பியசங்கீதம் (இசைத்தட்டு) 5-00 அ இ ரே பஜனைக்கோஷ்டி 5-15 கோஷ்டிவாத்தியம் (இசைத்தட்டு) 6-00 ஆங்கிலத்தில் செய்திகள், 6-05 வி.எ.பா. பேச்சு, 6-15 அ இ ரே வித்வான், 6-30 வாத்திய வகைகள் வயலின், புல்லாங்குழலும் கிளாரினெட்டும், வீணையும் கோட்டு வாத்தியமும், கோஷ்டி வாத்தியம், 7-00 பேச்சு (தெலுங்கு) 7-10 வேணுகானம் (இசைத்தட்டு) எஸ். ஜி. கிட்டப்பா செருகளத்தூர் சாமா, 7-20 தெலுங்கில் செய்திகள், 7-35 தமிழில் செய்திகள், 7-50 மதுரை மணிஅய்யர் பாட்டு, 9-00 உலகசரித்திரம் ஒரு விமர்சனம், 9-15 உள்ளூர் வர்த்தமானங்களும் அறிவிப்புகளும், 9-20 ஆங்கிலத்தில் செய்திகள், 9-30 லண்டனிலிருந்து செய்திகள் செய்திமுடிவில் மதராஸ் 2ல் உள்ளபடி, 10-00 ஒலிபரப்பு முடிவு.

மதராஸ் 2

முதல் ,இரண்டாவது ஒலிபரப்புகள் மதராஸ் 1-ல் உள்ளபடி.

மூன்றாவது ஒலிபரப்பு

4.00 மதராஸ் 1ல் உள்ளபடி, 5-45 ஒலிபரப்பு முடிவு.

நான்காவது ஒலிபரப்பு

6-00 மதராஸ் 1ல் உள்ளபடி, 6-05 கிராமநிகழ்ச்சி தெலுங்கு, 6-30 மதராஸ் 1ல் உள்ளபடி, 9-30 ஒரு பி. பி. ஸி. நிகழ்ச்சி (இசைத்தட்டு) 10-00 ஐரோப்பியசங்கீதம் (இசைத்தட்டு) 10-30 ஒலிபரப்பு முடிவு.

திருச்சி

முதல் ஒலிபரப்பு

காலை: 7-30 தினாரம்பம், 7-45 தமிழில் செய்திகள், 7-55 கிருஷ்ணன் [illegible] (இசைத்தட்டு) 8-20 பகவத்கீதை, 8-30 பஜன், 8-50 ஆங்கிலத்தில் செய்திகள், 9-00 ஒலிபரப்பு முடிவு

இரண்டாவது ஒலிபரப்பு

1-30 ஆங்கிலத்தில் செய்திகள், 1-35 மாதர்களுக்கு 2-00 ரசிகர்களுக்கு (இசைத்தட்டு) 2-45 தமிழில்செய்திகள் 2-50 என். ஸி. வசந்தகோகிலம் (இசைத்தட்டு) 3-00 ஒலிபரப்பு முடிவு.

மூன்றாவது ஒலிபரப்பு

மாலை: 5-00 மதராஸ் 1ல் உள்ளபடி, 5-45 இடைவேளை(இசைத்தட்டு) 6-00 ஆங்கிலத்தில் செய்திகள், 6-05 பி. வி. பொன்னம்மா (இசைத்தட்டு) 6-15 இசைப்பயிற்சி, 6-30 கிராமாந்திர நிகழ்ச்சிகள், 7-00 கூட்டுறவு இயக்கம், 7-15 கான்சாகிப் அப்துல் கரீம் கான் (இசைத்தட்டு) 7-30 அறிவிப்புகள், 7-35 தமிழில் செய்திகள், 7-50 மதராஸில் உள்ளபடி, 8-30 கால அறிவிப்பு, 9.00 சகுந்தலை மீட்சி (நாடகம்) 9-15இடைவேளை (இசைத்தட்டு) 9-20 ஆங்கிலத்தில் செய்திகள், 9-30 லண்டனிலிருந்து செய்திகள், 10-00 ஒலிபரப்பு முடிவு.

நவம்பர் 17 ஞாயிறு

மதராஸ் 1

முதல் ஒலிபரப்பு

காலை: 7-30 ஸ்வாகதம், 7-35 தெலுங்கில் செய்திகள், 7-45 தமிழில் செய்திகள், 7-55 படப்பாட்டுகள் (இசைத்தட்டு), 8-10 குழந்தைகளுக்கு (தெலுங்கு) 8-40 புத்தகத்தைப்பற்றி ஒரு பேச்சு (ஆங்கிலம்) ஸீ. இ. ஜேம்ஸ், 8-50 ஆங்கிலத்திலசெய்திகள், 9-00 [illegible] (தெலுங்கு) 10-00 சேர்க்கைகள் பொறுக்கியவை (இசைத்தட்டு) 10-30 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவதுஒலிபரப்பு

1-30 ஆங்கிலத்தில் செய்திகள், 1-35 ஸ்ரீமதி பார்வதிவார்சியார் பாட்டு, 2-00 த்வாரம் நரசிங்கராவ் வயலின், 2-30 கே. பி. சுந்தராம்பாள் (இசைத்தட்டு) 3-00 ஒலிபரப்பு முடிவு.

மூன்றாவது ஒலிபரப்பு

மாலை: 4-00 ஸ்ரீமதி பார்வதி வார்சியார் பாட்டு, 4-30 ஐரோப்பிய சங்கீதம், 5-00 த்வாரம் நரசிங்கராவ் வயலின், 5-45 வாத்தியசங்கீதம், 6-00 ஆங்கிலத்தில் செய்திகள், 6-05 மாலதிமாதவம் நாடகம், (தெலுங்கு) 6-30 நாகர்கோயில் கணேசஅய்யர் பாட்டு, 7.00 நேயர்கடிதங்கள், 7-10 திருவிழிமிழலை சுப்பிரமணியபிள்ளை சகோதரர்கள் (இசைத்தட்டு) 7-20 தெலுங்கில் செய்திகள், 7-35 தமிழில் செய்திகள், 7-50 ஸ்ரீமதி லக்ஷ்மி நாராயணன் நாயர் பாட்டு, 8-45 பேச்சு (ஆங்கிலம்) வி. ஆர். செட்டி 9-15 உள்ளூர் வர்த்தமானங்களும் அறிவிப்புகளும், 9-20 ஆங்கிலத்தில் செய்திகள், 9-30 லண்டனிலிருந்து செய்திகள், 9-45 ஐரோப்பியசங்கீதம் (இசைத்தட்டு) 10-30 ஒலிபரப்பு முடிவு.

மதராஸ் 2

முதல்,இரண்டாவது ஒலிபரப்புகள் மதராஸ் 1-ல் உள்ளபடி.

மூன்றாவது ஒலிபரப்பு

4-00 மதராஸ் 1ல் உள்ளபடி, 5-45 ஒலிபரப்பு முடிவு.

நான்காவது ஒலிபரப்பு

6-00 மதராஸ் 1ல் உள்ளபடி, 9-30 நாகர்கோயில் கணேசஅய்யர் பாட்டு, 10-00 அ இ ரே வித்வான்கள் வீணை, கோட்டுவாத்தியம், 10-30 ஒலிபரப்பு முடிவு.

திருச்சி

முதல் ஒலிபரப்பு

காலை: 7-30 தினாரம்பம், 7-45 தமிழில் செய்திகள், 7-55 திரைகானம், (இசைத்தட்டு) 8-20 தேவாரம், 8-50 ஆங்கிலத்தில் செய்திகள், 9-00 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

1-30 ஆங்கிலத்தில் செய்திகள், 1-35 குழந்தைகளே! சேருங்கள்! 2-00 அ இ ரே வாத்தியகோஷ்டியார், 2-30டி.சூர்யகுமாரி (இசைத்தட்டு) 2-45 தமிழில் செய்திகள், 2-50 புல்லாங்குழல், 3-00 ஒலிபரப்பு முடிவு.

மூன்றாவது ஒலிபரப்பு

மாலை: 5-00 வாத்தியகீதம், 5-15 ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி நடராஜன் பாட்டு, 6-00 ஆங்கிலத்தில் செய்திகள், 6-05 சிக்க ராமராவ் பாட்டு, 6-30 கிராமாந்திர நிகழ்ச்சிகள், 7-00 செய்திவிளக்கம், 7-15 டி. சௌடையா, ஆர். ஆர். கேசவமூர்த்தி (இசைத்தட்டு) 7-30 அறிவிப்புகள், 7-35 தமிழில் செய்திகள், 7-50 ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி நடராஜன் பாட்டு, 8-30 சிக்கராமராவ் பாட்டு, 9-20 ஆங்கிலத்தில் செய்திகள், 9-30 லண்டனிலிருந்து செய்திகள், 10-00 ஒலிபரப்பு முடிவு.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிச் சைவ வாலிப சங்கம்

சமய தீட்சை

இச்சங்க ஆதரவில் நிகழும் விக்கிரம வருஷம் கார்த்திகை மாசம் 2ந் திகதி (17-11-40) ஞாயிற்றுக் கிழமை காலை 7 மணியளவில் நீராவி மடத்தைச் சேர்ந்த ஸ்ரீலஸ்ரீ க. சோமசுந்தரக் குருக்கள் அவர்கள் இக் கல்லூரியில் பிள்ளைகளுக்குச் சமய தீட்சை செய்து வைப்பார்கள். சமய தீட்சை பெற விரும்புவோர் அனைவரும் அச்சமயத்தில் அங்கு வந்து அதனைப் பெற்றுக் கொள்ளலாம்.

ச. சேனாதிராசா
காரியதரிசி

நவம்பர் 18 திங்கள்

மதராஸ் 1

முதல் ஒலிபரப்பு

காலை: 7-30 ஸ்வாகதம், 7-35 தெலுங்கில் செய்திகள், 7-45 தமிழில் செய்திகள், 7-55 சவலி கிருஷ்ணமூர்த்தி பாட்டு, 8-25 இரு குரலிசைகள் கே. ராமனுஜ சாஸ்திரியும் ராமலிங்கமும், மாஸ்டர் ராசயும் நவமணி தேவியும் ராகவனும் ஜெயலக்ஷ்மியும், ஜி. விஸ்வேஸ்வரம்மாவும் மாஸ்டர்கருடும், எல். என். சங்கரநாதனும் எ. கே. ராஜலக்ஷ்மியும், 8-50 ஆங்கிலத்தில் செய்திகள், 9-00 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

1-30 ஆங்கிலத்தில் செய்திகள், 1-35 சவலி கிருஷ்ணமூர்த்தி பாட்டு, 2-00 பள்ளிக்கூடங்களுக்கு (ஆங்கிலம்) 2-30 ஜோடி குரல்கள் (இசைத்தட்டு) ஜெயலக்ஷ்மியும் ராகவனும், எஸ். ஆர். காந்தமும் பண்ருட்டி சகோதரிகளும், 2-45 தமிழில் செய்திகள், 2-50 தெலுங்கில் செய்திகள், 2-55 வாத்திய சங்கீதம் 3-00 ஒலிபரப்பு முடிவு.

மூன்றாவது ஒலிபரப்பு

மாலை: 4-00 ஆரம்பப் பாடசாலைகளுக்கு, 4-30 ஐரோப்பிய சங்கீதம், (இசைத்தட்டு) 5-00 ஸ்ரீமதி லலிதாபாய் சாமண்ணு வீணையும் பாட்டும், 5-45 வாத்தியசங்கீதம், 6-00 ஆங்கிலத்தில்செய்திகள், 6-05 வி. எ. பா. பேச்சு, 6-15 அ இ ரே வித்வான், 6-30 ஸ்ரீமதி லலிதாபாய் சாமண்ணு வீணையும் பாட்டும், 7-00 சொற்போர் சங்கு சுப்பிரமணியம் பேசுவார், 7-15 டி. சௌடையா வயலின் (இசைத்தட்டு) 7-20 தெலுங்கில் செய்திகள், 7-35 தமிழில் செய்திகள், 7-50 திருச்சியில் உள்ளபடி, 9-00 புஸ்தக விமர்சனம், கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி, 9-10 இடைவேளை (இசைத்தட்டு) 9-15 உள்ளூர்வர்த்தமானமும் அறிவிப்புகளும் (ஆங்கிலம்) 9-20 ஆங்கிலத்தில் செய்திகள், 9-30 லண்டனிலிருந்து செய்திகள், 9-45 ஸ்ரீமதி வி. எஸ். ராஜம் பாட்டு, 10-30 ஒலிபரப்பு முடிவு.

மதராஸ் 2

முதல்,இரண்டாவது ஒலிபரப்புகள் மதராஸ 1ல் உள்ளபடி.

மூன்றாவது ஒலிபரப்பு

4-00 மதராஸ் 1ல் உள்ளபடி, 5-45 ஒலிபரப்பு முடிவு.

நான்காவது ஒலிபரப்பு

6-00 மதராஸ் 1ல் உள்ளபடி, 6-05 கிராமநிகழ்ச்சி (தெலுங்கு) 6-30மதராஸ் 1ல் உள்ளபடி9-30 ஐரோப்பிய சங்கீதம் இசைத்தட்டு 10-30 ஒலிபரப்பு முடிவு.

திருச்சி

முதல் ஒலிபரப்பு

காலை: 7-30 தினாரம்பம்; 7-45தமிழில் செய்திகள், 7-55 ஆர். எஸ். வேலாயுத கிளாரினெட், 8-50 ஆங்கிலத்தில் செய்திகள், 9-00 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

1-30 ஆங்கிலத்தில் செய்திகள், 1-35 கே. வி. தியாகராஜன் பாட்டு, 2-00 கல்வி ஒலிபரப்பு 2-30 "சந்திமாயா" 2-45 தமிழில் செய்திகள், 2-50 [illegible] 3-00 ஒலிபரப்பு முடிவு.

மூன்றாவது ஒலிபரப்பு

5-00 வாத்தியசங்கீதம்,5-15 ஆர்.எஸ். வேலாயுத கிளாரினெட், 6-00 ஆங்கிலத்தில் செய்திகள், 6-05 'சாந்த தக்காரம்' 6-15இசைப்பயிற்சி 6-30 கிராமாந்திர நிகழ்ச்சிகள், 7.00 திருவள்ளுவரின் தனிச்சிறப்பு, நித்தியவாழ்க்கை முத்து சிவம் பேச்சு, 7-15 மூன்று வாத்தியங்கள், 7-30 அறிவிப்புகள், 7-35 தமிழில் செய்திகள், ரேடியோக் கச்சேரி 7-50 மஹாராஜபுரம் விச்வநாத அய்யர் பாட்டு செம்மங்குடி நாராயணஸ்வாமி வயலின், [illegible] சுப்ரமணியபிள்ளை மிருதங்கம், 9-20 ஆங்கிலத்தில் செய்திகள், 9-30 லண்டனிலிருந்து செய்திகள், 10-00 ஒலிபரப்பு முடிவு.

காவல் காட்டில் விறகு வெட்டும் உரித்து 1941

[illegible]

[illegible]

11.11.40

G 32 14-11-40

அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893ம் ஆண்டின் 8ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்சு பெற்று அடைவுபிடிக்கும் யாழ்ப்பாணம் கொட்டடி மா. கு. தெண்டாயுதபாணி என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:-

1938ம் ஆண்டு யூலை மாசம்

நம்.	உ.	ரு.	ச.	பெயர்.	ஊர்.	நகைவிபரம்.
101	21	35		சு நாகு	சோனகதெரு	பொன் அலுக்குத்து 7

1938ம் ஆண்டு செப்டம்பர் மாசம்

நம்.	உ.	ரு.	ச.	பெயர்.	ஊர்.	நகைவிபரம்.
1162	11	15		க. சின்னத்தங்கம்	மண்டைதீவு	பொன் தோடு 2
1170	11	16	03	கா. அப்துல்கமீது	சோனகதெரு	பூசாந்திரம் 1
1306	18	10		ச. கன்னி	வெட்டுக்காடு	கல மோதிரம் 1
1315	19	16		ய அவாலி	நவாலி	மோதிரம் 1
1387	21	12		வெ கார்த்திகேசு	மண்டைதீவு	அச்சரக்கூடு 1
1427	24	12	40	ஐ சுப்பிரமணியம்	நெடுந்தீவு	அச்சாக்கூடு 1
1494	27	15		மு கந்தையா	புங்குடுதீவு	கல்கவுத்தோர் 1

1938ம் ஆண்டு அக்டோபர் மாசம்

நம்.	உ.	ரு.	ச.	பெயர்.	ஊர்.	நகைவிபரம்.
1564	1	16		வ தில்லையம்பலம்	மண்டைதீவு	கல்த்தோடு 2
1571	1	10		மு மு அப்துல்காதர்	சோனகதெரு	அலுக்குத்து 3 பாதி பின் கோர்க்கி 1
1675	6	12		ப. கணபதிப்பிள்ளை	நெடுந்தீவு	கல்தோடு 2
1719	8	310		M.S.A. முகியித்தீன்பிச்சை	நாவாந்துறை ரோட்	ஆறுபட்டு மணிக்கோர்வை 1
1725	9	227	03	க முத்துத்தம்பி	வேலணை	நாக்கணம் மூன்றுடன் வடமன் கொடி 1
2012	23	6		சி கன்னி	பண்ணை ரோட்	புரூச் 1

1938ம் ஆண்டு நவம்பர்மாசம்

நம்.	உ.	ரு.	ச.	பெயர்.	ஊர்.	நகைவிபரம்.
2181	2	10		இ வேலுப்பிள்ளை	வைகதடி	கல்த்தோடு 2
2192	2	13		ச வேலுப்பிள்ளை	நயினாதீவு	கல்த்தோடு 2
2218	3	50		மு செய்னுப்பிள்ளை மரக்காயர்	சோனகதெரு	கெட்டிக்காப்பு 2
2256	6	10		சி கந்தையா	நயினாதீவு	கல்த்தோடு 2
2391	13	6		சே முகியித்தீன் பிச்சை	சோனகதெரு	குப்பிக்கடுக்கன் 2
2394	13	15		சி கந்தையா	அராலி	அச்சரக்கூடு 1
2416	15	80		உ சபாபதி	மண்டைதீவு	கம்பிப்பூரான்அட்டியல் 1
2484	20	260		கா சி வயிரமுத்து	கொடிகாமம்	பெரிய பதக்கத்துடன் சங்கிலி 1 காப்பு 2
2500	21	15	03	தி குலசப்பிள்ளை	நாவாந்துறை	கல்கடுக்கன் 2 மோதிரம் 1
2569	25	12		க முருகன்	அராலி	அச்சரக்கூடு 1

1938ம் ஆண்டு டிசம்பர்மாசம்

நம்.	உ.	ரு.	ச.	பெயர்.	ஊர்.	நகைவிபரம்.
2787	7	7		பா அசனுலெவ்வை	சோனகதெரு	கல் பெண்டன் 1
2845	11	122	03	க ஆறுமுகம்	கடையடி	கெட்டிக்கொலுசு 2 அச்சுக்காப்பு 2
3026	23	14		செ இதுறூப்	சோனகதெரு	மணிக்கோர்வை 1 குச்சி 4
3046	24	15		மோ அன்னமுத்து	நாவாந்துறை	காதுப்பூ 2 குப்பிக்கடுக்கன் 2
3090	27	7		ஐ சுப்பிரமணியம்	நெடுந்தீவு	குப்பிக்கடுக்கன் 2
3129	29	50	03	சு க முகம்மது தாவுது	காமடி	பொன் சவடி 1 கவுத்தோர் 1

1939ம் ஆண்டு ஜனவரிமாசம்

நம்.	உ.	ரு.	ச.	பெயர்.	ஊர்.	நகைவிபரம்.
3341	9	95		V. சுப்பிரமணியஐயர்	பருத்தித்துறை	பிலிப்காப்பு 2 குண்டுடன் தீபவுன் 1 தடை 4 சுதேசிக்காசு 1
3352	9	71	43	வ. செல்லையா	கொட்டடி	கம்பிப்பூரான் அட்டியல் 1
3447	15	10		கா இராசதுரை	ஆனைக்கோட்டை	குப்பிக்கடுக்கன் 2
3658	26	12		சி. செல்லத்தம்பி	அல்லப்பிட்டி	அச்சரக்கூடு 1
3751	31	10		க தாமோதரம்பிள்ளை	மண்கும்பான்	பதக்கம் 1

விற்பனவு நிகழும் விக்கிரமவருஷம் கார்த்திகைமாசம் 11ந்திகதி (26-11-40) செவ்வாய்க்கிழமை காலை 10 மணி யளவில் எடுபட்டவைகை பிறகேக்கலாக மிகுதி மேற்படியார் கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை,
வெந்திஸ்மேஸ்தர்.

(Mis. 145, 11 & 14-11-40)

பாலர் அபிநயப் பாடல்கள்

(CHILDREN'S ACTION SONGS)

திரு. ஞா. பா. வேதநாயகம்

அவர்களால் எழுதப்பட்டு இலங்கைத் துரைத்தனக் கல்வி அதிகாரிகளால் ஒப்புக் கொள்ளப்பட்டது

(*Vide Letter 17 th July, 1940*)

இச்சிறு புத்தகத்தில் காணப்படும் கதைகள் வசனநடையிலும், அபிநயப் பாட்டுகளுடனும் யாவரும் சேர்ந்து பாடுவதற்கு உபயோகமாக எழுதப்பட்டிருக்கின்றன. சில பிள்ளைகள் தமிழில் ஆர்வங் கொள்வதற்காகவும் சில, மனப்பாடஞ் செய்வதற்காகவும்; சில, வேடிக்கைக்காகவும் எழுதப்பட்டிருக்கின்றன. அபிநயம் (Action) உரையாடல் (Conversation) நாடகம் (Dramas) படங்கள் (Pictures) மனப்பாடம் (Memoritor) சித்திரம் வரைதல் (Drawing) களிமண்வேலை (Clay Modelling) முதலானவை எல்லாக் கதைகளிலும் புகுத்தப்பட்டிருக்கின்றன. பிள்ளைகளுக்கும் ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டவர்களுக்கும் இப்புத்தகம் மிகவும் உபயோகமாக இருக்குமென்பதில் சந்தேகமில்லை. விலை சதம் 75.

சிந்தாமணி மெட்கேளை இதிற் காணலாம்.

கிடைக்குமிடங்கள்:

யூனியன் பிரஸ், தபால் பெட்டி 362, கொழும்பு.	**S. S. சண்முகநாதன்** அன்சன்ஸ், வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.

H 109 1-9-40—28-2-41

திருநெல்வேலி ஒற்றுமை நிதி (வரையறுத்தது)

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா **500,000.**

ஒன்று 25 சதமாக 80 மாதங்கள் செலுத்தி ரூபா 25ம் ஆதாயமும் பெறலாம்

வங்கித்தொழிலும் வியாபாரமும் இலாபகரமாய் நடக்கின்றன.

தேசியகருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெறமுடியும்.

இலகுவான முறையில் இறுக்கக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம். உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும் நிரந்தரமாயும், சம்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும் பணம் ஏற்றுக்கொள்வோம்.

பங்குகளுக்கு முந்துங்கள்!

வ. சோமசுந்தரம்,
(வி) காரியாதிகாரி.

(Y. 89,C 1-11-39,to 31-10-40)

குயீன்பிருண்ட் (அரசி அடையாள) ஓடுகள்

குறைந்த விலை —— நிறைந்த குணம்

எங்கும் பெயர்பெற்ற, உறுதிவாய்ந்த ஊறுத, நல்ல சத்தமுள்ள யாவரும் விரும்பும் அழகிய ஓடுகள்.

இ. சுந்தரமூர்த்தி, (*Sole Agent*)
பெரியகடை, யாழ்ப்பாணம்.
c/o S. Veeragathipillai & Sons.

(Y. 89, B 12-8-39—11-8-40.)

வெள்ளவத்தை மில் துணிகளை

வாங்குங்கள்!

யாழ்ப்பாணம் முழுவதிலும் எல்லா வியாபாரிகளிடமும் பெற்றுக்கொள்ளலாம்

* *

- வேட்டிகள்
- சால்வைகள்
- சேலைகள்
- சாரங்கள்
- கம்பாயங்கள்
- லாங்குளோத்ஸ்
- மல்லுகள்
- துவாய்கள்
- களிசான் துணிகள்
- ரஸூர்
- பஞ்சணை உறைகள்
- பெட்ஷீட்டுகள்
- தலையணையுறைகள்
- ட்றில்லுகள்
- ஷேட் துணிகள்
- ஷீட்டுகள்

முதலியவை விசேஷமாக உள்ளன

புதியமாதிரி - கண்கவரும் திஸைன்கள்

மனோகரமான நிறங்கள்

யாழ்ப்பாணம் பெரியகடையிலுள்ள எங்கள் சில்லறை விற்பனவு

டிப்போவுக்கு விஜயஞ் செய்யுங்கள்!

வெள்ளவத்தை ஸ்பின்னிங் & வீவிங் கம்பனி லிமிற்றட்

(இந்தியாவில் சமுதாயமாக்கப் பட்டது)

(அங்கத்தவரின் உத்தரவாதம் வரையறுக்கப்பட்டது)

Mis 127 14-11-40—

பல் வைத்தியர்

எஸ். சாஸ்பத்திராஜு

லைசென்ஸ் பெற்ற பல்வைத்தியர். கண் பரிசோதிக்குந்திறமை வாய்ந்தவர்;

3-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் (ரேருக்கட்டிடத்துக்குக் கிட்ட)

ஆலோசனைக்குரிய காலம் முற்பகல் 8 மணி தொடக்கம் 12 மணிவரை.

உங்கள் மூக்குக் கண்ணாடியின் ஓடுகள் அல்லது கம்பிகள் அல்லது கண்ணாடிகள் உடைந்தால், தயவுசெய்து அவற்றை மேற்கண்ட விலாசத்துக்கு அனுப்பிவையுங்கள். அவை மிகச் சரியாகவும் விரைவாகவும் திருத்திக் கொடுக்கப்படும். குறுக்ஸ் ஸ்பீரோ, சிலிண்டர்

பிளேனோ, சிலிண்டர் ஆகியாம் விரும்பத்தக்க, தற்கால மாதிரிக்கேற்ற, அழகான கண்ணாடிகள் எம்மிடம் உண்டு. சாஸ்திர சீதியான எந்தக் கண்பரிசோதனைக்குமேற்றதான கண்ணாடிகளும் உண்டு. பவுண்மலாம் கொடுத்த கண்ணாடிக் கம்பிகளும் நிக்கல் வெள்ளியாற் செய்த கம்பிகளும் மிகச் சமீபத்தில் ஐரோப்பாவிலிருந்து தருவிக்கப்பட்ட எல்லா விதமாக கவின பிரேம்களும் எம்மிடம் உண்டு.

டக்றர்கள் குறிப்பிடும் ஒவ்வொரு அம்சமும் மிக்க கவனமாகவுந் திறமையாகவும் பூர்த்தி செய்யப்படும்.

எங்கள் விலைகுறைவு. கியாயமானது

Y 19 2-5-40—1-5-41

திறமான போர்டென்ஸ்

மோல்டட் மில்க்

வெகுநேர்த்தியான பானம்

சாப்பிடுவதற்கு ருசிகரமானது

சரீரத்திற்குச் சுகமானது

இது ஒரு புதிய நூதனமுறையில் தயாரிக்கப்பட்டதும் விட்டமின் A. B. G. அடங்கியுமுள்ளது

தூக்கமின்மை சோர்வு இவைகளால் வருந்தப்படுபவர்கள், தூங்கப்போவதற்கு முன், போர்டென்ஸ் மோல்டட் மில்கைச் சாப்பிட்டு விட்டுத் தூங்கச்சென்றால், யாதொரு தொந்தரவு மின்றி நன்றாய்த்தூங்கிச் சுகம் பெறலாம்.

இன்றிரவே ஒருகோப்பை தயாரித்துச் சாப்பிடுங்கள்

கலக்கவும் குடிக்கவும் மிகவும் இலேசானது

NET WEIGHT 7 OZ.
Borden's
THE IMPROVED
MALTED MILK
Borden's MEANS QUALITY
Borden's
MALTED MILK

விலைகுறைந்த திறமான மோல்டட்மில்க்
பெரிய போத்தல் 1-90 சிறியபோத்தல் 1-05

Y3—3-9-40

பத்திரிகிரயம்

[illegible]

சுதேசம் ரூபா 6.00 இங்கிலீஷ் தமிழும் 9.00
இலங்கை இந்தியா 8.00 இங்கிலீஷ் தமிழும் 12.00
தெளிவோம் பகுதி 9.00 இங்கிலீஷ் தமிழும் 13.00

தனிப்பிரதி சதம் 5

முற்பணமாக அனுப்பப்படல் வேண்டும்

விளம்பர விகிதம்

முதன் முறைக்கு

நாலங்குல ரூபா 10.00 அரைக்கால் ரூபா 5.00
சதுரங்குல ரூபா 4.00 [illegible] ரூபா 1.00

அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி

[illegible]

தி மலாயன் டிரேடிங் கொம்பனி

(சிங்கப்பூர்க் கொம்பனி)

இரும்பு, பித்தளைச்சாமான்கள் சிமேந்து வகைகள் விற்பனவு செய்வோர்

பெரியகடை, யாழ்ப்பாணம்
"புரூப்மைட்ச்"
K. A. இரத்தினசிங்கம்

Y. 50. 3-1-40—3-3-41.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM residing at Vannarponna, East, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday 14th November, 1940.